# செந்தனல்


செந்தனல்
SENTHANAL

தணல் 1 கனல் 4 2003 ஓகஸ்ட் 30




## 5 இலட்சம் பேரைக் கொன்ற உஹண்டா மன்னன்

## முழுமையான அதிகாரக் கட்டமைப்புள்ள ஒரு நிர்வாக அலகை நாம் சமர்ப்பிப்போம் - தமிழ்ச்செல்வன்





## மட்டு நகரின் மாவீரன் சாகசங்கள்

## தோட்டத் தொழிலாளர்களின் சம்பள இழுபறி பிரதமரிடம் கோரிக்கை!

## சச்சினுக்கு விதிவிலக்கா....?



செம்மையைச் செப்பிடும் செந்தணல்




## நமக்கென்று ஒரு உளியால் கலையுடைப் போம்

எமது மக்கள் அமைதியான வாழ்வை விரும்புபவர்கள் அதற்காக அத்துமீறல்களை சகிப்பவர்களும் அல்ல ஆயினும் அர்த்தமற்ற ஆவேசப் பேச்சுக்கள் இளம் பிள்ளைகளின் மனதில் நஞ்சை உமிழ்ந்து விடும் எனும் பயம் கருதியே சமய அமைதியைப் பேணவேண்டிய தேவை உண்டு எனக்கருதப்பட்டது இவ்விடயத்தில் சமயத்தரப்பாரும் இயல்பான போக்கைக் கடைப் பிடிப்பது சாலச் சிறந்தது மக்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கு அரசியல் சூழல் சமய கலாசாரச் சூழல் அத்திய அவசியமானது அத்தோடு பண்பாட்டுச் சூழலும் ஆரோக்கியமாக அமைய வேண்டும் எமது மக்களின் கலை இலக்கியம் பண்பாட்டுப் பரிவர்த்தனைகள் காத்திரமாக பயனுள்ளதாக அபிவிருத்திக் கண்ணோட்டம் கொண்டதாக அமைதல் வேண்டும்.

இன்றைய நவீன இலத்திரனியல் காலகட்டத்தில் பத்திரிகை வானொலி என்பன நவீன மயப்படுத்தப்பட்டுள்ளன தொலைக்காட்சி சேவைகள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன உலகத்தை வீட்டுக்குள் கொண்டுவரும் விந்தை மிகு விஞ்ஞானம் வளர்ந்துள்ள காலகட்டத்தில் எமக்கென ஒரு தொலைகாட்சி சேவை இல்லாதது ஒரு பெரும் குறைபாடே.

எமது அரசியல் அனாதை நிலைமை அதற்கு ஒரு காரணம் இலங்கைத் தீவில் அரச சார்பில் மூன்று தொலைக்காட்சி சேவை உள்ளன மூன்றும் பெரும்பான்மையாக சிங்கள மொழிச் சேவையே மிகுதியாகக் கொண்டுள்ளன அடுத்து ஆங்கில மொழியிலும் தமிழில் ஒரு சில மணித்தியால சேவையும் வழங்குபவையாக அவை உள்ளன

அரசியல் உண்மை வழங்க விரும்புகின்ற அரசு இம் மூன்று சேவைகளில் ஒன்றை முற்று முழுதாக தமிழுக்காக ஒதுக்க முடியாது இருப்பது ஏன்? ஒரு தமிழ் தொலைக்காட்சி சேவை நடத்தப்பட்டால் நாம் அதற்காக தமிழ் கலைஞர்களை ஒன்று திரட்ட முடியும் நிகழ்ச்சிகளைத் தயாரிக்க முடியும் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகள் ஈழத்தவரின் பண்பாட்டை அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாக அமைக்க வாய்ப்பேற்படும் அரசாங்கப் பின்னணியில் எமக்கென்று ஒரு தமிழ்தொலைக்காட்சி இல்லாத குறையை சக்தி டிவி, வவுனியா சன் டிவி மற்றும் சுவர்ணவாகினி ஐ அலைவரிசை தமிழ் நிகழ்ச்சிகளைத் தருவதன் மூலம் நிவர்த்தி செய்ய முயற்சிக்கிறார்கள் ஆயினும் இங்கும் ஒரு அவலம் ஏற்படுகிறது அரச சேவை உட்பட்ட அனைத்து சேவைகளும் எமது வாழ்க்கை அனுபவங்களை அரசியல் உணர்வுகளை பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பது மிகக் குறைவு இந்த நிலைமை மாற வேண்டும்

நிதர்சனம் படப்பிடிப்புக் குழுவினர் எமது சமகாலத்தை பல்வேறு நிகழ்ச்சிகளாகத் தயாரித்து வெளியிடுகின்றார்கள் இதே போல சக்தி டிவி, வவுனியா சன் டிவி போன்றனவும் மக்கள் சார்ந்த நிகழ்ச்சிகளைத் தயாரிக்க முயலவேண்டும் உள்ளூர் நிகழ்வுகளைப் படம்பிடித்து உள்ளூர் செய்திகளைப் போட வவுனியா பிரதேச தொலைக்காட்சி சேவையினர் முதல் கட்டமாக நடவடிக்கை எடுக்கலாம் தொடர்ந்து அர்த்தமற்ற நாடகத் தொடர்களைக் காட்டுவதை விடுத்து தரமான நிகழ்ச்சிகளை தேடி எடுத்தோ (கார்ட்டூன் மற்றும் டிஸ்கவரி விஞ்ஞான விலங்குகள் காட்சி) தாமாக உள்ளூர் கலைஞர்களுடன் இணைந்து தயாரித்தோ மக்களுக்கு காட்டலாம்

பேராயிரவர்

## கிறிஸ்தவ நற்சிந்தனை

முடிவுகள் (மதி 37:11)

தீமைசெய்வோரைக்கண்டு மனம் புழுங்காதே பொல்லாங்கு செய்வோரைக்கண்டு பொறாமைப் படாதே ஏனெனில் அவர்கள் புல்லைப்போல் விரைவில் உலர்ந்து போவார்கள் பசும் பூண்டைப்போல் வாடிப்போவார்கள் ஆண்டவரை நம்பு நலமானதைச் செய் நாட்டிலே குடியிரு. நம்பத்தக்கவராய் வாழ் ஆண்டவரிலே மகிழ்ச்சி கொள் உன் உள்ளத்து விருப்பங்களை அவர் நிறைவேற்றுவார் உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு அவரையே நம்பியிரு அவரே உன் சார்பில் செயலாற்றுவார் உன்நேர்மையைக் கதிரொலிபோலும் உன் நாணயத்தை நண்பகல் போலும் அவர்விளங்கச் செய்வார்

மரீனா

## சைவ நற்சிந்தனை

*உறுதியான பக்தி வேண்டும்*

மனிதனுக்கு வைராக்கியம் வேண்டும், உறுதியுள்ள உள்ளம் வேண்டும், இதனை பாரதியும் உறுதிகொண்ட நெஞ்சினாய் வாவா என மனிதனிடம் உறுதியுள்ள நெஞ்சு வேண்டும் என்று கூறியுள்ளார் இந்த உறுதி எவ்வாறாக இருக்க வேண்டும், ஆணவத்தின் அடிப்படையில் தன்னலம்மிக்க தன்முனைப்பான உறுதிப்பாடா? இல்லை பிறநலம் பேணும் இறைபக்தி மிக்க பக்தி வைராக்கியம் வேண்டும் இதனையே அடியார்களான நாயன்மார்கள் கொண்டிருந்தார்கள். கைலையங்கிரியில் இறைவனது திருக் கோலத்தைக் காணாது மாழும் இவ்வுடல் கொண்டு மீளேன் எனும் வைராக்கியத்தினை எண்ணிப்பார்க்க வேண்டும். உயர்ந்த விடையங்களிற்காகத் தன்னலமற்ற வைராக்கியம் மனிதனுக்கு அவசியம் இதனையே அடியார்கள் இறைவனிடம் வேண்டினார்கள்

சைவப் புலவர்
செ.குணபாலசிங்கம்

## இஸ்லாமிய நற்சிந்தனை

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள். ஒருவன் இறைவனுக்காகவே நட்புக் கொள்கிறான் இறைவனுக்காகவே பகைமை பாராட்டுகின்றான், இறைவனுக்காகவே கொடுக்கிறான், இறைவனுக்காகவே கொடாதிருக்கிறான் என்றால் அவர் நமது ஈமான (நம்பிக்கை) நிறைவு செய்தவனாகிறார்.

மௌலவி
சமட்




## இதய ஒலி

### செந்தணல் எழுக

செந்தணல் எழுக
தீமை எனும் குப்பை
வெந்துடன் எரிக
வெறும் சாம்பல் ஆகுக!

பண்மாரவன்னியன்
பைந்தமிழ்ப் பூமியில்
கொண்டு மேலெழுக
கொடுமைகள் தீய்க!

தமிழ் எனும் உணர்வு
தகதகத் தெரிக
இமிழ் கடல் ஈழம்
எங்கும் சுடர்க!

அநீதி தனை எதிர்த்து அமைதி
ஒளிதருக இனி ஒரு துயரம்
இல்லை என எரிக!

செல்வி அவள் கண்ணகி
செற்றம் என எரிக
அல்லாத தெல்லாம்
அழித்து நீ எரிக!

வாகரை வாணண்
மட்டக்களப்பு

## செந்தணல் நீடூழி வாழி

செந்தணல் நதியில் மூழ்கி
செருக்களம் புகுந்து நாளும்
விந்தைகள் புரிந்து வெற்றி
குவித்திடும் வீரர் வாழும்
செந்தமிழ் ஈழமண்ணில்
சிறப்புடன் செய்தி சொல்லும்
நல் செந்தணல் ஏடு கண்டேன்
சிந்தையில் மகிழ்வு கொண்டேன்

சிறுகதை சிறப்பாய்ச் சொல்லி
கருத்துடன் கவிதை சொல்லி
அறிவியல் அகிலச் செய்தி
அரசியல் அனைத்தும் சொல்லி
வெற்றிதரும் திரைப்படத்தின்

செய்திகள், குறையச் சொல்லி
நறுந்தமிழ் மணம் பரப்பி
செந்தணலே நீ -நீடூழி வாழி!

சி.சிவாபாலன்
கோண்டாவில் வடக்கு
யாழ்ப்பாணம்.

## செங்கதிராய்

செந்தணலே நீ செங்கதிராய்
நீண்ட செவ்வானாய்
நீடு வாழி - உன் புகழ்
உலகம் பேச - நீ
செம்மையுடன்செய்திகளையும்
செழுமையான தகவல்களையும் தந்து
எம் அறிவிற்கு உரம் தருவாய்

சீலா
நுவரெலியா

சுவைத்திரன்
மட்டக்களப்பு.

அன்பின் செந்தணலிற்கு,
உங்கள் பத்ததிரிகையை
மட்டக்களப்பில் கண்டேன் எடுத்த
எடுப்பிலேயே அசத்திவிட்டீர்கள்
பிரமாண்டமான வெற்றியை
பத்திரிகை அடையும் என்பது நமது
நம்பிக்கை

திக்வயல்
சி.தர்மகுலசிங்கம்

## தேடுகின்றார்கள்

ஒருவன் இல்லாத ஒன்றை தேடுகின்றான், மற்றவன் இன்னொன்றை தேடுகின்றான், இன்னொருவன் ஒன்றைப்பற்றி அதிகம் தேடுகின்றான், ஒருவன் இன்னொருவனைப் பற்றி தேடுகிறான், ஒருவன் சொத்தைத் தேடுகின்றான், மற்றொருவன் மனிதர்களைத் தேடுகின்றான், இன்னொருவன் வேலையாளைத் தேடுகிறான், அடுத்தவன் வேலைக்காரியைத் தேடுகின்றான் இன்னொருவன் துணையைத் தேடுகின்றான், ஒருவன் வசிப்பிடத்தைத் தேடுகின்றான் இன்னொருவன் வாகனத்தைத் தேடுகின்றான், ஒருவன் பதவியைத் தேடுகின்றான், மற்றொருவன் வாழ்க்கையில் உயர்வைத் தேடுகின்றான், ஒருவன் குழந்தையைத் தேடுகின்றான், மற்றொருவன் இல்லாத குழந்தையைத் தேடுகின்றான், ஒருவன் தர்மத்தைத் தேடுகின்றான், மற்றொருவன் உயிர்வாழ்வதற்குத் தேடுகின்றான், இன்னொருவன் வாழ்வின் முடிவைத் தேடுகின்றான். மனம் கொண்டதுதான் மாளிகை என்பர் அதற்காக கற்பனையில் வாழ முடியாது ஆனால் உள்ளத்தில் உண்மையாக வாழலாம் நீங்கள் எதைத் தேடுகிறீர்கள்?

கேமமாலினி
வவுனியா

## வாழ்க்கையும் காதலும்

வாழ்க்கைக்கும் காதலுக்கும் வேறுபாடு தெரியாமல் சிலர் வாழ்ந்து பாழாய்ப் போய்க் கொண்டிருக்கின்றார்கள் அதாவது காதல் தான் வாழ்க்கை காதலில் தோற்று விட்டால் வாழ்க்கை முடிந்து விட்டது என சிலர் தற்கொலை கூட செய்து விடுகின்றனர் ஆனால் அதுவல்ல உண்மை வாழ்க்கைக்காகத்தான் காதல் அதற்காக காதல் தான் வாழ்க்கை என எண்ணக் கூடாது வாழ்க்கை என்பது ஒரு புத்தகம் மாதிரி அதில் உள்ள ஒரு தாள் போன்றது காதல் ஆகவே ஒரு தாழ் கிழிந்து விட்டதே என நாம் புத்தகத்தையே வீசி விடுவதில்லை அதில் எந்த நியாயமும் இல்லை அது ஒரு கோழைத் தனமாகாத்தான் இருக்கும் எனவே மீதியாக உள்ள தாள்களைப் புரட்ட வேண்டும் படிக்கவேண்டும் இது போல் நாமும் தோல்வி அடைந்தால் சோர்ந்து விடக்கூடாது காந்தி அடிகளைப் பாருங்கள் அவருக்கு எத்தனையோ சோதனைகள் வேதனைகள் தோல்விகள் அவர் நிமிர்ந்து நிற்க வில்லையா வெற்றி காண வில்லையா எனவே நாமும் மீதி வாழ்வை தன்னம்பிக்கையுடன் நின்று வாழ்ந்து காட்ட வேண்டும்

M.M.சாஜஹான்
வ/ பாவக்குளம் -21




மூங்கில்க்காடு
வாடைக்காற்று வந்தது
மூங்கில்மரங்கள் மெல்லிசை பாடி
கூடிக்குதூகலித்தன
காற்று பலமாக வீசியது
பற்றிக்கொண்டது மூங்கில்காடு
மரண ஒலிகள்
மயானமாய்க் காட்சியளித்தது
மூங்கில்க்காடு
எரிந்த மூங்கில்துண்டங்கள்
துடைத்தெடுக்கப்பட்டன
காய்ச்சிய இரும்பினால்
துளையிடப்பட்டது
வேதனையில் வெந்தது
மூங்கில் துண்டு
அன்று நிறைந்த சபையில்
குழல் (மூங்கில்) வாசிக்கப்பட்டது.
மெய்சிலிர்த்துப் போனது மூங்கில்.

வாழ்க்கையின் படிகள்
நிலைப்பதில்லை
ஏறுவதும் இறங்குவதும்
வாழ்க்கையின் நியாயங்கள்
அதிலேதான் சுவையும் இருக்கிறது
புண்பட்டவன், பண்பட்டவன்.

செந்தணல்
"செம்மையைச் செப்புவோம்"
சூரியன் வெளியீட்டகம்
61, கற்குழி,
வவுனியா
தொலைபேசி : 024-23891
தொலை நகல் : 024-23891

அன்புடன் வாசக உள்ளங்களுக்கு,
வணக்கம்

ஒன்றுபட்ட இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் எமது திருத்தத்தை இலங்கை அரசு மறுக்க முடியாது. இவ்வாறான ஒரு தீர்வை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையுடன் பரிஸ் நோக்கிச் சென்றிருக்கும் விடுதலைப்புலிகள் தமிழர்கள் வரலாற்றிற்கு சமாதான மகுடம் சூட்டுவார்கள் என்பது அனைத்து தமிழ் மக்களின் நம்பிக்கையாகும். தமிழர்களின் உரிமைகளை வழங்குதல் அவர்களது அபிலாசைகளை பூர்த்தி செய்தல் சமத்துவமாக நடத்துதல் சுயகௌரவத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துதல் ஆகியவற்றை சிறிதேனும் கணக்கில் எடுக்காமல் தட்டிக்களிக்கும் அரசு இம்முறை நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆலோசனைக் கூட்டத்தை அடுத்தாவது இவற்றை நாம் பெற உறுதிப்படுத்தாதா என்பதே. இன்று தமிழ், முஸ்லிம் மக்களிடையே சீண்டிவிடப்படும் சில்லறைத்தனமான சம்பவங்கள் பாரிய பிரச்சனைகளை உருவாக்ககி விடக்கூடாது. ஒன்றரை வருட கால யுத்த நிறுத்தத்தை பல்வேறு இறுக்கங்கள் மத்தியிலேயே தொடரும் நிலமையில் அதைக்குழப்பித்தான் தீருவோம் என சில தீய சக்திகள் கங்கணங் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். கிழக்கிலங்கையை மையப்படுத்தி வெளிப்பட்டு வரும், முஸ்லீம் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என உருவாக்கிவரும் கருத்துக்கள் சமாதான சூழ்நிலையில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தி விடக்கூடாது. எல்லாவற்றிற்கும் மத்தியில் பிரதேசரீதியிலாக இடம்பெற்று வருகின்ற இன அடிப்படையிலான, வர்க்க ரீதியிலான பாரபட்சங்களை கண்டும் காணாமல் இருக்கும் அதிகாரிகள் ஒதுங்கியிருக்கும் சமூகத்தை எப்படி அடக்கி ஒடுக்கலாம் என சந்தர்ப்பம் வகுக்கும் வர்க்க பேதங்கள் முதலில் ஒழிக்கப்பட வேண்டும் உரிமைகளோடு சேர்த்து உணர்வுகளும் பேசப்பட வேண்டும். அச்சாணிபோல் விளங்கும் தொடர்கின்ற ஆலோசனைக் கலந்துரையாடலோடு. தொடரப்போகும் பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களின் எதிர்காலத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

அன்புடன்
ஆசிரியர்.

## கசிப்பு விற்பனை நான்கு பேர் கைது

முகத்தான்குளம் பண்ணை 2ல் தமிழீழ விடுதலைப் புலிகள் 22.8.03ம் திகதியன்று கசிப்பு விற்பனை செய்தவர்களையும் கசிப்புக் குடிக்கச் சென்றவர்களையும் பிடித்தனர். மொத்தம் 8 பேர் இவர்களில் ஒருவர் அவர்களை மிகவும் தந்திரமான முறையில் ஏமாற்றிவிட்டு தப்பிச் சென்றுவிட்டார் இவ்விடத்தில் கைப்பற்றப்பட்ட பொருட்களை யும் பிடித்தவர்களையும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்றே இவர்களில் 4பேர் விடுதலையும் செய்யப்பட்டனர்.

நிருபர் -ஊரான்

## பாடசாலை அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து மனுத்தாக்கல்

நீதிமன்ற நிருபர்

தனது மகளை விசாக்கா வித்தியாலயத்தில் சேர்த்துக் கொள்ள மறுத்தமை அடிப்படை உரிமையை மீறும் செயல் என தந்தை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மனுதாரர்களான முகம்மட் இஸ்னி முனீர் அவரது மகள் பாத்திமா அம்ரா இஸ்னி ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் விசாக்கா வித்தியாலய அதிபர் ரூபா அமரசிங்க தேசிய பாடசாலைகளின் அத்தியேட்சகர் பி.எச்.பி.சிகனகே கல்விஅமைச்சின் செயலாளர் ஏ.ஆர்.எம்.டீ.அமரக்கோன், கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு ஆகியோர் எதிர் மனுதாரர்களாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

முகம்மட் இஸ்னி முனீர் ஒரு மருத்துவக்கலாநிதி கொழும்பில் இவரது வீடு விசாக்கா வித்தியாலயத்திற்கு 100மீற்றர் தூரத்திற்குள் உள்ளது.

இவரது மகளை விசாக்கா வித்தியாலயத்திற்கு சேர்த்துக் கொள்வதற்காக இவர் செய்த விண்ணப்பத்திற்கு எதுவித பதிலும் இல்லாத காரணத்தால் இவர் தொலைபேசியில் விசாக்கா வித்தியாலய அதிபரிடம் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது விண்ணப்பம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனவும் விசாரித்துவிட்டு அதற்கான நடவடிக்கையை எடுப்பதாக கூறியதாகவும் அதற்குப் பின்பும் எதுவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் மீண்டும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்ட பொளுது விசாக்கா வித்தியாலய பழைய மாணவர்களின் வேண்டு கோளுக்கு இணங்க பௌத்தர்களை மட்டுமே பாடசாலையில் சேர்த்துக் கொள்வதாகவும் பிற மதத்தினரை சேர்ப்பதில்லை எனவும் அதிபர் கூறியதாக மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார். தனது மகளின் அனுமதி மறுக்கப்பட்டமை அடிப்படை உரிமையை மீறுவதாக மனுதாரர் மனுவில் கூறுகின்றார். மதத்தை அடிப்படையாக வைத்து பிள்ளை ஒன்றை பாடசாலையில் சேர்த்துக் கொள்ளாமை 1939ம் ஆண்டு 31ம் இலக்க கல்விச்சட்டத்தின் கீழும் அரசியல் அமைப்புச்சட்டம் 12 (2) பிரிவின் கீழும் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு மீண்டும் ஒருமுறை நேர்முகப் பரீட்சை நடாத்துமாறு உத்தரவிட வேண்டும் எனவும் மனுவில் மனுதாரர் கோரியுள்ளார்.

துறைமுகங்கள், கப்பற்துறை, கிளக்கு அபிவிருத்தி, இஸ்லாமிய விவகார அமைச்சர் ரௌவ் ஹக்கீமின் மகள் ஏற்கனவே விசாக்கா வித்தியாலயத்தில் கல்வி கற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாகன விபத்து

வவுனியா வெ.செ.இலுப்பைக்குளத்தில் இருந்து தலைமன்னார் நோக்கி 30 பயணிகளை ஏற்றிச் சென்ற வான் ஒன்று செட்டிக்குளம் முகத்தான் குளத்தில் 25.8.2003 அன்று தலைகீழாகப் புரண்டு விபத்திற்குள்ளானது. இவ்வாகனத்தை செட்டிகுளம் பங்குத்தந்தையே ஓட்டிச் சென்றார் இவ் வாகனல்தில் இரண்டு அருட்சகோதரிகள் உட்பட சென்ற 30 பயணிகளில் 4பேர் படுகாயமுற்று வவுனியா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் சிறு காயங்களுடன் உயிர்தப்பியமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இவ்வான் விபத்திற்குள்ளானமைக்கான காரணம் அதிவேகமாக சென்றமையே எனக் கூறப்படுகின்றது.

நிருபர் -ஊரான்

# உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு நபரின் குமுறல்

சி.பாக்கியராஜன்
இல-27 சங்கரப்பிள்ளை வீதி
இறம்பைக் குளம்
வவுனியா
14/08/2003

பிரதம ஆசிரியர்
செந்தணல் பத்திரிகை
வவுனியா.

ஐயா/அம்மணி,

14/02/2002 ல் எனது சொந்த சகோதரியின் கணவராகிய திரு சு.யு செபஸ்ரியன் வன பரிபாலன திணைக்கள விடுதி வவுனியாவில் (மதவு வைத்தகுளம்) காலமானதால் அவ்வடக்க ஆராதனைக்கு சமூகம் அளித்திருந்தேன் அங்கு சமூகமாயிருந்த அவரது மகன் றஜீவ் ஜெகநாதன் 15/12/2002 ல் அடக்க ஆராதனை முடித்த பின் அவரது பாவனையில் இருந்த பொருட்களை கிராம சேவையாளர் உறுதிப்பாட்டுடன் என்னிடம் கையளித்திருந்தார் அப் பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கு வனதிணைக்கள அதிகாரிகளிடமும் வவுனியா பிரதேச செயலாளரிடமும் உத்தரவும் பெற்றுத் தந்தார் ஆனால் துரதிஷ்டவசமாக பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதில் பிரயாண ஒழுங்கில் காலதாமதம் ஏற்பட்டது வனதிணைக்கள அதிகாரிகள் திடிரென்று ஒரு நாள் விடுதித் திறப்புக்களை விடுதியில் தனித்திருந்த என்னிடம் இருந்து பாரம் எடுத்து அன்றே எனது சமூகமும் பிரசன்னமும் இல்லாத வேளையில் வீட்டை பார்வையிட்டதனால் நான் இதனை வவுனியா அரச அதிபரிடம் முறையிட்டேன் ஆனால் அடுத்த தினமே வீட்டிலுள்ள பொருட்கள் (எனது பொருட்கள் எனது பணம், எனது நகைகள், இறந்தவரின் பொருட்கள், எனது ஆவணங்கள், இறந்தவரின் ஆவணங்கள்) என எனது கணிப்பில் 15 லட்சம் ரூபா பொருட்கள் நான் வசித்த வனத்திணைக்கள விடுதியில் இருந்தது எனது விருப்பத்திற்கு மாறாகவும் எனது சமூகம் இல்லாத வேளையில் எடுத்துச் சென்றுள்ளனர் இதனையும் நான் அரச அதிபரிடம் முறையிட்டேன் அரச அதிபர் அவர்களது நேரடி வாக்கு மூலத்தின் பின் எனக்கு எழுத்து மூலமான பதில் தந்தார் இதனை வவுனியா பொலிஸ் அத்தியட்சகருக்கு கடிதம் மூலமாக முறையிட்டிருந்தேன் வவுனியா பொலிஸின் நேரடி விசாரணையின் பின் ஒரு சிவில் வழக்கு வைக்க உத்தரவிடப்பட்டேன் இருந்தும் இதற்குரிய வழக்கை பொலிஸ் அதிகாரியை வைக்கும்படி கோரியும் அவர்கள் இதை மறுத்திருந்தார்கள் இந்த நிலையில். இதனை மனித உரிமைகள் மீறல் ஆணைக்குழுவிடம் முறையிட்டேன் அன்றிலிருந்து இன்று வரை மனித உரிமை மீறல் அலுவலகத்தால் நான் அடைந்த ஏமாற்றங்கள்.

(1) முறையிட்ட பொழுது மாத்திரமல்ல இன்று வரை பல தடைவைகள் இவ்விடயம் சம்பந்தமாக முறையிட்டும் முறைப்பாட்டுப் புத்தகத்தில் எனது பெயரோ முறைப்பாட்டு விடயமோ பதியப்பட வில்லை

(2) அன்று பொலிசாரால் கைவிடப்பட்ட நிலையில் முறையிட்டும் இது மனித உரிமை மீறலுக்குரிய விடயம் அல்ல என்று அன்றய மனித உரிமை மீறல் உத்தியோகத்தர் என் முன்னிலையில் பிராந்திய இணைப்பாளரின் ஆலோகனை பெற்றபின் எனக்குக் கூறினார்

(3) இதனால் 3 மாதங்களுக்கு மேல் சட்ட ஆலோசனை (உள்நாடு வெளிநாடு) பெற்றேன் தொலை பேசிக்கு மாத்திரம் ரூபா 10,000 க்கு மேற்பட்ட பணம் செலவழித்தேன் ஆனால் இது மனித உரிமை மீறல் விடயம் என்று சட்டவல்லுனர்களால் வலியுறுத்திக் கூறப்பட்டது

(4) மீண்டும் 3 மாதங்களின் பின் மனித உரிமை மீறல் அலுவலகத்தில் சட்டத்தரணிகளின் கூற்றை எடுத்துக் கூறினேன் கடிதம் தரும்படி இதற்கு கடிதத்தை கையளித்தேன் ஆனால் கடிதம் கையளிக்கும் போது கைத்துண்டு கேட்டும் கொடுக்கப்படவிலை

(5) கடிதம் கையளிக்கக் கேட்ட போது பிராந்திய இணைப்பாளர் கூறியதற் கிணங்க எந்தவிதமாண நடவடிக்கை எத்தனங்களும் 14 நாட்களுக்கு மேலாகியும் இது வரை எனக்கு அனுப்பி வைக்கப்பட வில்லை

(6) கடிதம் கையளிக்கப்பட்ட 2 தினங்களில் மனித உரிமை காரியாலயத்திற்கு கையளித்த கடிதம் தொடர்பாக பிராந்திய இணைப்பாளரிடம் நேரடியாக கேட்கச் சென்றேன் பிராந்திய இணைப்பாளர் திரு சே.ரவீந்திரன் தனது அலுவலக அறை அல்லாத அறையில் இருந்தார் பல மணிநேரம் என்னைக் கண்டும் காணாதது போல் அந்த அறையினுள்ளேயே இருந்தார்

(7) மனித உரிமை மீறல் அலுவலகத்தில் இருந்து கடிதம் பெற்றுக் கொண்டதற்கான கடிதம் அல்லது நடவடிக்கை பிரதிக் கடிதம் கிடைக்காததால் ஏமாற்றமடைந்து பொருட்களும் பறிபோனதால் மனமுடைந்த நிலைக்கு தள்ளப்பட்டு பாவிக்கப்படும் மாத்திரைகள் இன்று அதிக வேளைகளாகப் பாவிக்கிரேன்

ஆகவே தயவு செய்து தங்களது பத்திரிகையில் எனது குறைகளை பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்

இப்டிக்கு தங்கள் உண்மையுள்ள
சி.பாக்கியராஜன்

## கிழக்கில் புரிந்துணர்வுடன் முடிவு வேண்டும்

கிழக்கு மாகாணத்தில் இன்று ஏற்பட்டிருக்கும் துரதிஸ்டமான நிகழ்வுகள் தமிழ் முஸ்லிம் மக்களின் புரிந்துணர்வின் அடிப்படையில் முடிவுக்கு கொண்டு வரவேண்டும் இல்லையேல் இத்தொடர் நிகழ்வுகள் பாரிய விளைவுகளை உருவாக்கும் என்பதை அரசியல் தலைமைகள் புரிந்து கொள்ள வேண்டும் என்று தமிழ் தேசிய பணிக்குழுவின் தலைவரும் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் ஆலோசகரான தில்லைக்கூத்தன் இ.நடராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது பேரினவாத சக்திகளும் சமாதான எதிர்ப்புச் சக்திகளும் தீட்டும் சூழ்ச்சிகளிற்கு முஸ்லிம் சமூகம் பலியாகி விடக்கூடாது.

தமிழ் மக்களினது உரிமைப் போராட்டம் தகுந்த தருணத்தில் முஸ்லிம்களினது உரிமைகளை கருத்தில் கொண்டு செயல்படும் எனவே கிழக்கில் இனசௌஜன்யமும் புரிந்துணர்வும் தமிழ் முஸ்லிம் உறவில் பேணப்பட இருசாராரும் உழைக்க வேண்டும்.

சுழற்சி நிருபர் மட்டக்களப்பு.

## மன்னாரில் குண்டுவெடிப்பு

மன்னாரில் கடந்த 19ம் திகதி குண்டு வெடிப்பொன்று நிகழ்ந்துள்ளது 19ம் திகதி மன்னார் சின்னக்கடைப் பகுதியில் அமைந்துள் ஈ.பி.டீ.பி. அலுவலகத்திற்கு அருகாமையில் இனம்தெரியாத நபர்களினால் குண்டு வீசப்பட்டது. இக்குண்டு ஈ.பி.டீ.பியின் மன்னார் மாவட்ட பிரதிநிதியை குறிவைத்து வீசப்பட்டதாக தெரிய வருகிறது.

அந்நபர் தமது மோட்டார் சைக்கிளில் இரவு 8மணியளவில் செல்லும் பொழுது முதலில் துப்பாக்கி வேட்டொன்றும் அதைத் தொடர்ந்து ஒரு கைக்குண்டும் வீசப்பட்டுள்ளது. இதில் எவரிற்கும் எதுவித காயமோ, உயிர்ச்சேதமோ ஏற்படவில்லை. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசார் அவ்விடத்தை சுற்றிவளைத்து தேடுத்ல் வேட்டை நடத்தியும் சூத்திரதாரி அகப்படவில்லை.

சமாதானக் காலங்களில் இதுபோன்ற நயவஞ்சகத்தனமான செயல்களை பொது மக்கள் கண்டிக்கின்றனர்.

மன்னார் நிருபர்.

## பொங்குதமிழ் நிகழ்வு வவுனியாவில் பனிப்போர்

எதிர்வரும் 15ம் திகதி செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் அரச ஊழியர்கள் கலந்துகொள்வார்களா என அறியத்தருமாறு வன்னிமாவட்ட இராணுவக் கட்டளை இடும் தளபதி வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் கேட்டிருப்பதை அடுத்து உள்ளூர் அரச அதிகாரிகள் இதுதொடர்பில் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே சென்றவாரம் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொள்ளாமை தொடர்பாக அதிபர்களிடம் விளக்கம் கோரியிருந்த வன்னி மாவட்ட இராணுவக் கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால தற்போது பொங்குதமிழ் நிகழ்வில் அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வார்களா என அரச அதிபரிடம் வினவியதை அடுத்து இரு தரப்பினருக்குமிடையே பனிப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தப் பொங்குதமிழ் விவகாரம் தொடர்பில் மாகாணசபை உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர் அலிக்பிஹாரவிற்கு கடிதமொன்றை அனுப்ப தீர்மானித்திருக்கும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் அவர்கள் அரச உத்தியோகத்தரின் நிலைப்பாடு குறித்து இக்கடிதத்தின் மூலம் அமைச்சருக்கு விளங்கப்படுத்த தீர்மானித்துள்ளார்.

பொங்குதமிழ் நிகழ்வானது அமைதிக்கு ஊறுவிளைவிக்குமென இராணுவத்தினர் கூறுவதையும் இது தமிழர்களின் கலை, கலாசாரத்தை பிரதிபலிப்பதாக உள்ளதென நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் கூறுவதனையும் அமைச்சருக்கு சுட்டிக்காட்ட வுள்ளதாக விளக்கிய அரச அதிபர் இக்கடிதத்தின் பிரதியை மாவட்ட இராணுவக்கட்டளையிடும் இராணுவத் தளபதிக்கும் அனுப்பவுள்ளதாக கூறினார்.

இதேவேளை படையினரின் இவ்வாறான செயல்பாடுகள் மனித உரிமை மீறலென பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் வவுனியா போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வி.ஜெ.ஏ

அரச ஊழியர் வீடமைப்புத் திட்டம்
சாம்பல் தோட்டம்.

செந்தணல்
கற்குழி,
வவுனியா

### அரச ஊழியர் வீடமைப்புத் திட்டம் சார்பான மீழாய்வு இடை நிறுத்தல்

மேற்கூறப்பட்ட வீடமைப்புத் திட்டம் எமது நீண்டகால முயற்சியின் பயனாக கடந்த சுதந்திர தின நாளில் (04.02.2003) அன்று சகல திணைக்கள ஊழியர்களை உள்ளடங்கலாக 40 பேருக்கு அரச அதிபர் மாகாண காணி ஆணையாளர் பிரதேச செயலாளர், ஆகியோரின் பூரண ஒத்துழைப்புடன் சாம்பல் தோட்டதத்தில் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டது தற்பொழுது ஊழியர்கள் காணியினை அபிவிருத்தி செய்துகொண்டிருக்கும் நிலையில் (4 மாதங்களின் பின்) ஆதாரங்கள் எதுவுமற்ற நிலையில் எழுதப்பட்ட முறைப்பாடுகளின் பிரகாரம் மீழாய்வு செய்யுமாறு அரச அதிபர் பணித்ததற்கு அமைய கடந்த 23.05.2003ம் 29.05-2003ம் ஆகிய தினங்களில் அரச அதிபரின் பிரதிநிதிகள் "நிர்வாக அதிகாரிகளுடனான மீளாய்விற்" மீழாய்வினை நடத்தி முடித்துள்ளனர்.

இம் மீளாய்வின் பிரகாரம் முன்பு வழங்கப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு சுமார் 20 பேரின் காணிகள் திட்டமிட்டு, உள்ளீர்க்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட முயற்சிகள் நடைபெறுகின்றன. இவ்விடயத்தினை மாகாண காணி ஆணையாளர்கள் உட்பட அரச அதிபருக்கு அனுப்பிய கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும் இவ்விடயத்தில் எங்களை பழிவாங்கப்பட்டதாக அறியப்படுகின்றது இவ்விடயத்தை காணி அமைச்சர் கௌரவ ரஜீதசேனாரட்ண அவர்களுக்கு முறையிட்டு மீழாய்வினை இடைநிறுத்துவதுடன் நியாயமான வகையில் பகிர்ந்தளிக்கப்பட்ட எமது காணிகளை மீளப்பெறுவதற்கு அனுமதி வழங்குமாறு கோரியுள்ளோம்.

பிரதி: 1. மேன்மைதங்கிய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க அவர்கள்
2. மாண்பு மிகு பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அவர்கள்
3. பொது நிர்வாக அமைச்சர் கௌரவ பஜித அபயரட்ண அவர்கள்
4. வடகிழக்கு மாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் A.K ஜயவர்தன அவர்கள்

ஏனைய முக்கியஸ்தர்களுக்கும் அனுப்பியுள்ளோம் இக்கடிதத்தின் பிரதி தங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காகவும் அனுப்பி வைக்கிறோம்.

நன்றி

தொழிற்சங்க சேவையிலுள்ள
மாவட்ட இணைப்பாளர்.
ஆ.குமாரசிங்கம்


## மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள இழுபறி பிரதமரிடம் கோரிக்கை

அரசாங்க திறைசேரியில் இருந்து ஒதுக்கப்படும் பணம் உரிய நேரத்தில் வழங்கப்படாததால் தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் மற்றும் மாதாந்த முற்பணம் போன்றவற்றை வழங்குவதில் தொடர்ந்தும் இழுபறி நிலை உள்ளது எனவே பிரதமர் இவ்விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு லங்கா தோட்ட தொழிலாளர்கள் சங்க பொது செயலாளர் எஸ் இராமநாதன் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசினால் நிர்வகிக்கப்பட்டுவரும் தோட்டங்களுக்கு அரசாங்கம் உறுதியான கொள்கையை கடைப்பிடிக்க தவறியுள்ளதால் அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். அரசாங்கத் திறைசேரியில் இருந்து ஒதுக்கப்படும் பணம் உரிய நேரத்தில் வழங்கப்படார்ததால் தொழிலாளர்களின் வேதனம் மற்றும் மாதாந்த உணவுப் பொருட்களுக்கான முற்பணம் போன்றவற்றை வழங்குவதில் தொடர்ந்து இழுபறி நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது இதன் காரணமாக தொழிலாளர்கள் பெரும் சிரமங்களுக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள் எனவே நீங்கள் இவ்விடயத்தில் தலையிட்டு சகல தொழில்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி உறுதியானதும் நிரந்தரமானதுமான தீர்வொன்றை தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த விடயத்தில் தொழில் சங்கங்கள் தொடார்ச்சியாக எடுத்துவரும் நடவடிக்கைகளையும் அரசு ஊதாசினப்படுத்தி வருவதனால் தோட்டங்களின் நிலைமை எதிர்காலத்தில் பாரிய விழைவுகளை தோற்றுவிக்க வழிகோலலாம் என அஞ்சப்படுகின்றது. ஜனநாயக ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் பிரயத்தனங்கள் தோல்வியில் முடிகின்ற காலகட்டத்திலேயே தீவிரவாதமும் அழிவுகளும் ஏற்படுவதை நாம் சரித்திர வாயிலாக அறிகின்றோம்.

இந்நிலை மலையகத்திலும் தோன்றி கசப்பான சம்பவங்கள் இடம்பெறும் வகையில் மலையகதத்தை தள்ளிவிடாமல் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பதை வலியுறுத்திக் கொள்ள விரும்புகின்றேன். எனவே இது விடையத்தில் கரிசனையுடன் அணுகி உரியதீர்வினை உடனடியாக மேற்கொள்ளுமாறு வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.



போரூட் (Forut) நிறுவனமானது செட்டிக்குளம் பிரதேசத்தில் கப்பாச்சிக் கிராமத்தில் இளைஞர்கழக உறுப்பினருக்கு நன்னீர் மீன்பிடி தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு மீன்பிடி உள்ளீடுகளை வழங்கியது மேற்படி படங்களில் செட்டிக்குளம் பகுதித்திட்ட இணைப்பாளர் திரு.க. நவரத்தினம் பயனாளி ஒருவருக்கு உள்ளீடுகளை வளங்குவதையும் அருகில் இளைஞர்க கழக உறுப்பிர்களுடன் செட்டிகுளம் பகுதி இளைஞர் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வன் நா.கபில்நாத் நிற்பதையும் பயனாளிகள் தமது பொருட்களை பகிர்ந்து பெறுவதையும் . படத்தில் காணலாம்

ஊரான்.

## மண்சரிவில் 4பேர் மரணம்

26.08.2003 அன்று கஹவத்தயில் ஏற்பட்ட மண்சரிவினால் 4பேர் பலியாகினர் கஹவத்தை எனும் இடத்தில் குழியான இடமொன்றில் வேலை செய்துகொண்டிருந்த 4 பேரின் மீது மண்திட்டு ஒன்று சரிந்து விழுந்ததில் உடனேயே ஒருவர் பலியானார் ஏனைய மூவரையும் மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் இறந்து விட்டார்கள்.

மலையக நிருபர்

# உலகச் செய்திகள்

## நியூஸ்லாந்தில் கடுமையான நிலநடுக்கம்

நியூஸ்லாந்தின் தென்பகுதியில் சில தினங்களுக்கு முன் கடும் நில நடுக்கம் தாக்கியது. ரிக்டர் அளவுகோலில் 7.1 என்ற அளவிற்கு பதிவான இந்த நிலநடுக்கம் பொதுவாக விவசாயநிலம் கொண்ட பகுதிகளை தாக்கியதால் பாதிப்பு அதிகமில்லை என்று கூறப்படுகின்றது. ஃபியோடேலேண்ட் எனும் இடமே அதிகமான தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளது எனக் கூறும் நியூஸ்லாந்தின் மண்பொதுயியல் மற்றும் அணு விஞ்ஞானக் கழகம் இந்த நிலநடுக்கத்தின் மையம் 20 கிலே மீற்றா் தூரத்தில் கடலில் மையம் கொண்டிருந்ததாக கூறியுள்ளது. நிலநடுக்கம் 12.மணி 12நிமிடம் அளவிலே தாக்கியதற்குப் பிறகு அடுத்தடுத்து நூற்றுக்கணக்கான அதிர்வுகள் அப்பகுதியில் ஏற்பட்டது என்றும் அப்படிப்பட நில அதிர்வில் ஒன்று ரிக்டர் அளவு கோலில் 6.2 என்று பதிவாகியுள்ளது என்றும் அணுவிஞ்ஞானக்கழகம் கூறுகிறது.

நியூஸ்லாந்தில் இருந்து 2400கி.மீ தூரத்தில் உள்ள அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் ஏற்பட்டடுள்ளன என்றும் செய்திகள் கூறுகின்றன.


## மைக்கிறோசொப்ட் நிறுவனத்திற்கு நீதி மன்ற உத்தரவு

சன் நிறுவனத்தின் யாவா ஸ்கிரிப்ற்கள், விண்டோஸ் ஒப்றேற்றிங் ஸிஸ்டத்தில் எனேபிள் செய்யப்பட வேண்டும் என்று மைக்ககிறோஸெப்ட் நிறுவனத்திற்கு அமெரிக்க நீதிமன்றம் உத்தரவு விதித்துள்ளது வாஸிங்டன் மாகாண நீதிமன்றத்தில் இதுதொடபான வழக்கில் நீதிபதி பிரேடிரீக் மோட்ஸ் உத்தரவிட்டார் யாவா அப்பிலிகேஸன் தொடர்பாக சன் மற்றும் மைக்கிரசொப் நிறுவனங்களுக்கு இடையே சில ஆண்டுகளாக சர்ச்சை இருந்து வருகிறது மைக்கிரசொப்ட் வெளியிட்ட விண்டோஸ் எக்ஸ்பி ஒப்ரேட்டிங் ஸிஸ்டத்தில் ஜாவா ஸ்கிரிப்ட்களை செயல்படுத்த முடியாது இது மைக்கிரசொப்ட் செய்த சதி என்று சன் நிறுவனம் வாதாடியது. ஆனால் பின்னா் இந்த விவகாரத்தில் பின்வாங்கிய மைக்கிரசொப்ட் நிறுவனம் ஜாவா ஸ்கிரிப்ட்களை விண்டோஸ் எக்ஸ்பி ஏற்கும் வகையில் மாற்றங்கள் செய்வதாகவும் ஆனால் 2004ற்கு பிறகுதான் இதை செயல்படுத்த முடியும் என்றும் கூறியது. இந்த விவகாரம் தொடர்பாக நீதிமன்றத்தில் சன்நிறுவனம் வழக்குத் தொடா்ந்திருந்தது இந்த வழக்கிற்குத் தான் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய இருப்பதாக மைக்கிரசெப்ட் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

## எல்லை தாண்டிய பயங்கரவாதம் நீடிக்கிறது.

பாக்கிஸ்தானில் இருந்து காஸ்மீருக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தும் எல்லை தாண்டிய பயங்கரவாதம் இன்னமும் தொடா்ந்து கொண்டுதான் இருக்கிறது என்றும் அமெரிக்காவிற்கும் பாகிஸ்தானுக்கும் அது ஒரு பிரச்சனையாகவே தொடா்கின்றது என்றும் அமெரிக்கா கூறுகிறது. இதனை அடுதத்து அமெரிக்க அயலுறவு அமைச்சகப் பேச்சாளர் றிச்சாட் பௌச்சர் ஊடுருவல் ஓரளவிற்கு குறைந்துள்ளது உண்மை என்றாலும் இன்னமும் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுப் பகுதியில் பயங்கரவாதிகள் ஊடுருவிக் கொண்டு தான் இருக்கிறார்கள் என்று கூறினார்.

மேலும் ஊடுருவல் பிரச்சனை அமெரிக்காவிற்கு கவலை அளிப்பதாகவும் பாகிஸ்தானுடனான முக்கி பிரச்சனையாக தொடா்கின்றது என்றும் எல்லை தாண்டி பயங்கரவாதம் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார். பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் பாகிஸ்தானும் ஈடுபட்டுள்ளது என்றும் பயங்கரவாதிகளை ஒடுக்க பாகிஸ்தான் அமைத்துள்ள பயங்கரவார எதிர்ப்புப் படையினருக்கு அமெரிக்கா பயிற்சியளித்து வருவதாகவும் தெரிய வருகிறது.




## கடிதப் போக்குவரத்துத்தான் கண்ட மிச்சம்

கடிதம் வருகிறது பதில் போகிறது
கடிதம் போகிறது பதில் வருகிறது
கடைசியில் இது தான் நாம் கண்ட மிச்சம்
புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு
ஒன்றரை வருடத்துக்கு மேலாகியும்
ஒரு துரும்பு தானும் அசையவில்லை
பேச்சு வார்த்தைக்கு அழைத்து
ஒரு வருடத்துக்கு மேலாகப்
பேய்க் காட்டிய பின்
பேய்க் காட்டலின் முகமூடி கிழிந்ததால்
பேச்சுவார்த்தை குழம்பியது
புலிகளுடன் ஒரு கையைக்
குலுக்கிக் கொண்டே நமது அரசு
மறு கையை அமெரிக்காவிடமும்
இந்தியா விடமும் நீட்டுவதை
உலகம் பார்த்துக் கொண்டு இருக்கிறது
புலிகளுக்குத் தெரியாமல் போகுமா?
அது தெரிந்த பின்னும்
கையைக் குலுக்குவது விவேகமாகுமா?
கைகுலுக்கல் நின்றது
கடிதப் போக்குவரத்து ஆரம்பித்தது
பேச்சுவார்த்தையைப் போலவே
கடிதப் போக்குவரத்தும் ஏமாற்றுவேலை தான்
காலம் கடத்தித் தன்னை பலப்படுத்தும் உத்தியிது
ஒரு சிறுபிள்ளை கூட இதையறியும்
பழைய படி வேதாளம் முருங்கை மரத்தில்
ஏறிக் கொண்டதையே இது காட்டுகிறது.

ம.நகா் அன்பன்

## சமாதானத்தைக் குழப்புவோர்

இருபது ஆண்டுகளுக்கு மேலாக
இரத்த ஆறு ஓடிய பின் தரித்து நின்று
இனி மேலாவது இந்த மண்ணைக்காப்போம்
இனி மேலாவது இந்த மக்களைக் காப்போம்
என்று ஒரு நல்லெண்ணத்துடன் உதித்தது
அந்த நல்லெண்ணத்தில்
மண் அள்ளிப் போடுபவர்களை
என்ன வென்று சொல்வது
அரச படைகளுக்குத் தண்ணி காட்டிய புலிகள்
இன்று தனி நாட்டுக் கோரிக்கையை விடுத்து
சமஷ்ட்டித் தீர்வுகளுக்கு வந்த பின்னரும்
தப்பாட்டம் ஆடுகிறார்கள் சிலர்
இடைக்காலத் தீர்வு கொடுப்பதை எதிர்த்து

வீடு வீடாகவும் கடை கடையாகவும் சென்று
இவர்கள் பிரசாரம் செய்கிறார்களாம்
என்ன பிரச்சாரம் வழக்கமான பொய்பிரசாரம்தான்
இந்த அரசு புலிகளுக்கு நாட்டைத்
தாரை வார்த்துக் கொடுக்கிறதென்ற
பொய் பிரசாரம் தான்
இப்படிப் பிரசாரம் செய்பவர்களிடம்
சமாதானத்துக்கான மாற்றுத்திட்டம்
உண்டா என்று கேட்க வாய்ப்பில்லை
சமாதானம் குழம்பி யுத்தம் வெடித்தால்
யுத்த முனைக்குச் செல்வீர்களா என்று
இவர்களிடம் கேட்க வாய்களில்லை
சொகுசு வாகனங்களில் சென்று
பிரசாரம் செய்து விட்டு
சொகுசாக வீடுகளுக்குச் செல்லும் இவர்களை
யார் தட்டிக் கேட்பது?

ம.நகா் அன்பன்

# செய்திக்கதிர்

## சமாதான சக வாழ்வு

ஒரு நாட்டில் வாழும் மக்கள்
அனைவரும் சம உரிமைகளுடனும்
சமத்துவத்துவடனும்
வாழ வேண்டும் என்பதே மனித உரிமைச்சாசனம்
சிங்கள மக்கள் அனுபவிக்கும்
உரிமைகளை தமிழ் மக்களும்
அனுபவிக்கவேண்டும்
என்பதே இதன் சாராம்சம்
பெரும்பான்மை மக்கள்
அனுபவிக்கும் உரிமைகளை
சிறுபான்மை இன மக்கள்
அனுபவிக்கிறார்களா என்பதே
சமாதானத்தின் அடிப்படைக் கேள்வி
சமாதானத்தைக் குழப்புவோர் இதன்
அடிப்படையில் தான் மாற்று
திட்டங்களை முன்வைக்க வேண்டும்
எங்களுக்கு குழப்பமட்டும் தான்
தெரியும் தீர்வுகளை காண வேண்டியது
எங்கள் வேலையல்ல அது உங்கள்
வேலை என்போர் எந்த முகத்துடன்
மக்கள் முன்வருகிறார்கள்
எப்படி இவர்களுக்கு அரச ஊடகங்களில்
முக்கிய இடம் கிடைக்கிறது
இவா்களுக்கெதிரான மாற்றுக் கருத்துக்கள்
ஏன் அரச ஊடகங்களில் வெளிவருவதில்லை
சமாதான சகவாழ்வின்
அடிப்படைத் தேவைகள் பற்றி
ஏன் அரச ஊடகங்கள்
மக்களுக்கு எடுத்துக் கூறுவதில்லை
சிறுபான்மை மக்களை எப்படியாவது
ஒழித்துக்கட்ட வேண்டும்
என்ற தீவிரத்துடன் இருப்போர்
சமாதான சகவாழ்வு பற்றிப் பேசுவது
எப்படிப் பொருத்தமாகும்?

ம.நகா் அன்புமணி

## செந்தணல் நிலையிலே

இலங்கையின் சமாதான
செயல்பாடுகள் செந்தணல்
நிலையிலேயே தகித்துக்
கொண்டிருக்கின்றன இத்தணல் நிலை
திரும்பவும் கொடுந் தீயாக மாறி
கொழுந்து விட்டெரியலாம் அல்லது
தணல் நிலையிலேயே இருந்து
அணைந்து போகலாம் இவை
எல்லாம் இனி மேல் அரசு - புலிகள்
பேச்சு வார்த்தைகளில் சுமூக நிலை
ஏற்படுவதும் அவ்விதம்
ஏற்படாவிட்டால் இனி மேலும் போர்
வேண்டாமென்று தமிழ் சிங்கள
முஸ்லீம் மக்கள் இணைந்து
இருசாரருக்கும் அழுத்தம்
கொடுப்பதிலும் தான் தங்கியுள்ளது
நிரந்தர சமாதானத்தை நோக்கி
ஒன்றிணைந்து பயணிக்கும் போது
சமாதானத்திட்டங்ளிலும் அதனை
இலக்கு வைத்து எமது
செற்பாடுகளிலும் வெற்றி பெறுவது
பெரும்பாலும் பத்திரிகைகளில்
தங்கியுள்ளது என்பதால்
தங்களுடைய பத்திரிகையும்
சமாதானப் பத்திரகையாகச்
செயற்படும் என நம்புகின்றோம்

வாகரை வாணண்

# மாற்று யோசனைகளில் அன்ரன் பாலசிங்கத்துடன் எரிக்ஷோல்கெய்ம்

"இலங்கையின் இனப்பிரச்சனைக்கு சமாதான வாயிலில் தீர்வு காண அரசாங்கம் உண்மையாக விரும்பினால் தாம் முன்வைக்கும் மாற்று யோசனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்"
இவ்வாறு கூறினார் தமிழ்ச் செல்வன்.

வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பில் அரசாங்கம் முன்வைத்த யோசனைகளிற்கு மாற்றீடாக விடுதலைப்புலிகளின் யோசனைகளை தயாரிப்பதற்கான சட்ட அறிஞர்களது கூட்டம் 24ம் திகதி சனிக்கிழமை அன்று பிரான்ஸ் தலைநகர் பாரிஷில் உள்ள ஹொட்டேல் ஒன்றில் ஆரம்பமானது விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையில் ஆரம்பமான கூட்டத்தில் இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர் சிவபசுபதி உட்பட பல சட்ட அறிஞர்கள் கலந்து கொள்கின்றார்கள்.

இக்கலந்துரையாடல்கள் ஆரம்பமாக முன் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பிலேயே மேற்கண்டவாறு விடுதலைப்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் கூறினார் அதே வேளை இக்கருத்து தெரிவித்த விடுதலைப்புலிகளின் சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவன் தமிழ் மக்கள் சமாதான முயற்சிகளுக்கு பிரான்ஸ் அரசு வழங்கும் ஆதரவின் அடையாளமே பரிஷ் நகரில் நடைபெறும் இச்சந்திப்பு என்று தெரிவித்தார் இச்சந்திப்பில் கலந்து கொள்வதற்காக அரசியல் துறை பேராசிரியர் இராமசாமி மலேசியாவில் இருந்தும், சட்டத்துறை பேராசிரியர் இமானுவேல்பிள்ளை, போல் டொமினிக், சிட்னியில் இருந்து சட்டத்துறை பேராசிரியர் சுவர்னராஜன், சிங்கப்பூரில் இருந்தும் இங்கு வந்திருக்கின்றார்கள் இவர்களை விட விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி கருணா சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் பொருளாதார ஆலொசகர் ஜோய் மஹேந்திரன் பொருண்ய மேம்பாட்டுக் களக பொறுப்பாளர் தூயவன் கஸ்றோ, பாரதிராஜா தொல்காப்பியன், அலெக்ஸ் நெடியோன் அறிவு ஜோர்ச், வி.உருத்திர குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர் இவ்வாலோசனைக் கூட்டத்தில்



அரசாங்கம் முன்வைத்த யோசனைகளை பரிஷ் நகரில் விடுதலைப்புலிகளும் பிரமுகர்களும் சட்ட வல்லுனர்களும் ஆராயும் பணி இறுதிக்கட்டத்தை அடையும் நிலையிலே நோர்வே விசேட தூதுவர் எரிக் சோல்ஹிம் 27ம் திகதி செவ்வாய்க்கிழமை அவர்களைச் சந்தித்த போது அவர்கள் மாற்று யோசனைகள் தொடர்பான பூர்வாங்க விளக்கங்களை அளித்ததாக தெரியவருகிறது லண்டனில் இருக்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்டன் பாலசிங்கம் பரிஷ் நகரில் இருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு நிலமைகளை கேட்டறிந்து கொள்வதாகவும் ஒவ்வொரு தகவல்களும் உடனுக்குடன் வன்னித் தலைமைச் செயலகத்திற்கு தெரிவிக்கப்பட்டு வருவதாகவும் பரிஸ் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன

புலிகள் பரிஷில் தயாரிக்கும் மாற்று யோசனைகள் வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்ட பின்னரே இறுதிவடிவத்துடன் விசேட தூதுவர் எரிக் சோல்ஹிம் ஊடாக அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. இதே வேளை கனடாவின் முன்னாள் பிரதமர் பெப்றே 27ம் திகதி செவ்வாய் கிழமை பரிஷில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் மற்றும் சட்ட ஆலோசகர் குழுவையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

புலிகளின் சட்ட ஆலோசனைக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட பெப்றே கனடாவில் காணப்படும் சமஷ்தி அமைப்பு முறை குறித்தும் அது எதிர்கொள்ளும் பிரச்சனை தொடர்பாகவும் விரிவாக தெளிவுபடுத்தியுள்ளார் அத்துடன் விடுதலைப்புலிகளால் முன்வைக்கக் கூடிய இடைக்கால நிர்வாக சபைக்கான மாற்று யோசனை குறித்தும் கேட்டறிந்துதமது கருத்துக்களையும் அவர் தெரிவித்தார். இதேவேளை பரிஷில் இருந்து நோர்வே தூதரகத்திற்கு 27ம் திகதி செவ்வாய்கிழமை விஜயம் செய்த தமிழ்ச் செல்வனும் அவரது குழுவினரும் பிரான்ஸிலுள்ள நோர்வே தூதுவருடன் கலந்துரையாடியுள்ளனர். நோர்வே தூதவரின் அழைப்பின் பேரிலேயே இச்சந்திப்பு இடம் பெற்றுள்ளது சமாதான முன்னெடுப்புகளிற்கு நோர்வே அனுசரணையாக செயற்படுவதனால் மரியாதை நிமிர்த்தமே இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாக தூதரக வட்டாரம் தெரிவித்தது. பரிஷ் கூட்டத்தை முடித்துக் கொண்ட பின்னர் தமிழ்ச் செல்வனும், கருணாஅம்மானும் மற்றும் புலிகளின் முக்கியஸ்தர்களும் அடுத்த சில தினங்களில் சுவிஸ்லாந்திற்கு செல்வரென எதிர்பார்க்கப்படுகின்றது சுவிஸில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் அழைப்பை ஏற்றுக்கொண்டு இவர்கள் அங்கு செல்ல இருப்பதாலும் அங்கு நடைபெற இருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்பர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. தமிழ்ச் செல்வனும் கருணா அம்மானும் சுவிஸிற்கு செல்வது இதுவே முதற்தடவையாகும் இவர்கள் சுவிஸில் 5 நாட்கள் தங்கிவிட்டு செப்டெம்பர் முதல்வாரத்தில் நாடு திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வி.ஜே.ஏ

# அக்கரைப்பற்று பஸ் நிலைய அபிவிருத்தியில் யாருக்கும் அக்கறையில்லை

அக்கரைப்பற்றிலிருந்து நாடோடி இலங்கையில் வர்த்தகப் போக்குவரத்து துறைகளில் முக்கிய கேந்திரங்களில் ஒன்றாக உயர்ந்து நிற்கும் அக்கரைப்பற்று நகரிலே இன்றுவரை ஒரு பஸ்நிலையம் கூட இல்லை பஸ் நிலையம் தான் இல்லாவிட்டாலும் பஸ்கள் நிறுத்தி வைக்கப்படடிருக்கும் பகுதிகளில் ஒரு மலசல கூடத்தையாவது




இதுதான் அக்கரைப்பற்று பஸ் நிலையம் அளிக்கும் அற்புதக்காட்சி
படம்: விபிஎஸ்

அமைப்பதற்கு போக்குவரத்து சபையோ இப்பகுதி பிரதேச சபைகளோ முன்வரவில்லை என்று பிரயாணிகள் தெரிவிக்கின்றனர்

அக்கரைப்பற்று ஒரு வரலாற்றுப் புகழ் பெற்ற இடம் இந்தப் பிரதேசத்திலிருந்து பாராளுமன்றத்தில் ஒரு அமைச்சரும் எதிர்க் கட்சியில் ஒரு உறுப்பினரும் இருக்கின்றனர் இவர்களுக்கு இது எங்கே தெரியப்போகிறது இதே நேரத்தில் அக்கரைப்பற்று நகர்ப் பகுதி ஒரு தனியான நகர சபையாக மாற்றம் செய்யப்பட விருப்பதாகவும் சொல்லப்படுகிறது

போக்குவரத்துக்கு பஸ்களும் பிரயாணிகளும் அதிகரித்துள்ள கால கட்டத்தில் ஏனைய இடங்களிளுள்ள நவீன வசதிகள் இல்லாவிட்டாலும் தற்போது பஸ் நிலையம் செயல்ப்படும் பிரதேசத்தில் மலசல கூடம் ஒன்றையாவது அமைப்பதற்கு போக்குவரத்து சபையோ இந்த பஸ் நிலையம் இருக்கும் பிரதேசத்தில் உள்ள அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு ஆகிய பிரதேசபைகளோ முன்வரவில்லை என்றால் இப் பிரதேசத்தின் நிர்வாகத்தை இதில் இருந்து அவதானிக்க முடிகின்றது

தற்போது அக்கரைப்பற்று பஸ் நிலையம் செயல்படும் பகுதி 1985ம் ஆண்டுக்கு முன்பு பொதுச் சந்தைப் பகுதியாக இருந்தது அதில் ஒரு பகுதியில் பஸ் நிலையம் செயல்பட்டுக் கொண்டு வந்தது 1985ம் ஆண்டு அக்கரைப்பற்றில் ஏற்பட்ட வன்செயலின் போது சந்தைக் கட்டிடங்கள் முழுமையாக எரிந்து நாசமாகியதைத் தொடர்ந்து அப்போது பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த ஜி.திவ்வியநாதன் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து பஸ் நிலைய மொன்றை ஏற்படுத்தினார் ஆறு மாத கால இடைவெளிக்குப்பின்பு அந்த இடம் பொருத்தமில்லை என்று கைவிடப்பட்டு இன்று அந்தக் கட்டிடம் கவனிப்பார் அற்றுப் போய்க்கிடக்கின்றது

பழைய இடத்திற்கு பஸ் நிலையம் வந்த போது எந்தவித வசதிகளும் இல்லாது இருந்தமையினால் வர்த்தகர்கள் பொலிசார் இணைந்து ஒரு கட்டிடம் அமைக்கப்பட்ட போதிலும் அது பிரயாணிகளுக்குப் பொருத்தமற்றதாகவும் சபை ஊழியர்களின் அலுவல்களுக்கு பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்றது

தற்போது பஸ் நிலையம் உள்ள பகுதி ஒரு ஏக்கருக்கு மேல் பரப்புள்ளதாக இருப்பதினால் இந்த இடத்தில் தான் தனியார் பஸ்களும் ஆட்டோக்களும் நிறுத்தி வைக்கப்படுவதோடு சிறு தேனீர்க் கடைகளும் மதுபானம் போதைப் பொருள் விற்பனை செய்யும் கேந்திர நிலையமாகவும் இருந்த போதிலும் முக்கிய தேவையான ஒரு மலசல கூடத்தை அமைத்துக் கொடுப்பதற்கு யாருமே முன்வரவிலை்லை

இந்த பஸ் நிலையத்தில்தான் தற்போது கட்டாக்காலி கால்நடைகளும் நாய்களும் தங்களின் இருப்பிடங்களாக மாற்றிக் கொண்டார்கள் அது மட்டுமல்ல ஒரு சிறு மழை பெய்து விட்டால் போதும் பஸ் நிலையமே ஒரே சேறும் சகதியுமாக மாறிவிடும் இடைக்கால நிர்வாகம் தமிழீழவிடுதலைப் புலிகளிடம் வந்தாலாவது எமக்கு விமோசனம கிகடைக்குமா என்று பிரயாணிகள் என்ன அக்கரைப்பற்று மக்களே அங்கலாய்கிறார்கள்.

அக்கரைப்பற்று பஸ் நிலையத்திற்கு கட்டப்பட்ட பிரயாணிகள் தங்குமிடம் இன்று கவனிப்பார் அற்றுப்போய்கிடப்பதை படத்தில் காண்க பொதுமக்களின் வரிப்பணம் இப்படிப் பாழாவது அதிகாரிகளின் கண்களில் தென்படவில்லையா.

# கவிதைக் களம்

## நிலாப் பெண்



பிரம்மன் செதுக்கிய
பழிங்குப் பெண்ணே
வானப்பந்தலில் தவழும்
வளைகாப்பு மங்கையே
தென்றல் தாலாட்டும்
செந்தாமரையே
அல்லியை மலர்விக்கும்
மாய ராணியே
பூந்தேரில்வருகின்ற
பூலோக அரசியே
மரணித்துப் பிறக்கும்
மந்திரக் குழந்தையே
விண்மீன்களின் மணிமுடியே -நீ
இருளின் இதயமே
கவிஞர் கண்ணிண்
கற்பனை கன்னியே
என் விழிகளுக்குள் பவனி
வருகின்ற பௌர்ணமிப் பெண்ணே
நான் எழுதி வைத்துள்ள
புதுக்கவிதையைப்படிக்க
கவிஞர் கூறிடும்
பௌர்ணமியில் ஜனனமாகிடு
நல் வாடைத் தென்றலோடு





பெ.சிவசங்கரி
ஆண்டு 12 கலைப்பிரிவு
வ.நெளுக்குளம் கலைமகள்
மகாவித்தியாலயம்

## வசந்தம்

வாழ்க்கை எனும் கோப்பையில்
வசந்தத்தை தொலைத்த பாவி நான்
சென்ற பாதையெல்லாம் பள்ளம்
மேடான என்
கனவுகளும் நினைவுகளும்
பாழாய்ப் போய் பள்ளத்தில்
வீழ்ந்ததென்ன
நினைப்பதை நெருங்க முடியாமல்
விரும்பியதை தொட முடியாமல்
நேசிப்பதை தழுவ முடியாமல்
என்ன சாபமிது எனக்கு

நிலோ

## பஞ்சுப் பூ

காதில் வடிந்தது சீழ்
ஆ அதில் வைத்தேன் பஞ்சுப் பூ
வந்தது வந்தது
புரிந்துணர்வு?
வைக்கின்றார் துப்பாக்கி
வாயில் பஞ்சுப் பூ
விளங்கவில்லை இன்னும்,
துப்பாக்கிக்கு வந்ததோ
காதில் சீழ்?

திக்கவயல் தர்மு

## நயவஞ்சகமா?

இம்மடலூடு பேசும் போதெல்லாம்
அவன் ஞாபகம் எனை உசுப்பி
விடுகிறது
எப்பொழுதும் - இதில்
என் கைபட்டாலும்
அருவருப்பில் அவமானப்
படுகிறேன்

எப்படி மாறலாம்
என்னை ஏன் ஏமாற்றினான்

உண்மையானவன் என்று தானே
உயிராகப் பழகினோம்

என் வெள்ளை ரோஜாவிற்கு
எப்படி அவன்
சிவப்பு சாந்து பூசலாம்



நட்பென்று கூறியவன்
நான் உன் காதலன் என
வார்த்தையை எப்படி மாற்றலாம்?

கங்கை என்று
எண்ணவைத்து அவன்
சேற்றை அல்லவா பூசிவிடுகிறான்

இருந்தபோதும் உன்னுடன்
எனக்கு கோபமில்லை - ஆனால்
என்னை நிஜமாக நேசிப்பாயா?
அப்படியானால்
என்னை நேசிப்பதாக கூறிய நீ
எப்படி
எதிராய் குருசோத்திரம் புரிகிறாய்

அஜந்தா

## பசுமையான நினைவுகளில்

இருண்ட வானமாய் என் இதயம்
ஏனோ வளமிழந்து கிடக்கின்றது
மருண்ட என் விழிகளை ஏதோ
நெருடி வருகின்றது
ஆம் நான் அன்று ரசித்த அந்த
இனிமையான தென்றலும்
நீண்ட பெரு வயலும்
நிலத்தை தொடும் வானமும்
காய்ந்த சருகுகள் காற்றில்
சிறகு விரிப்பதும்
சாய்ந்த மரத்தில் இரு சிட்டுக்கள்
களிப்பதையும்
பார்த்து இரசித்த ஞாபகம்
வந்ததனால்
இன்று இருண்ட வானமாய் என்
இதயம்
வசமிழந்து கிடக்கின்றது
அன்று மருண்ட என் விழிகளை
இன்று ஏதோ நெருடி வருடுகிறது

காயத்திரி
வன்னி

## நியாயம் தானா

ஏய் பெண்ணே
என்னை ரொம்பவும்
அன்புடன் பார்த்துப் பார்த்து
வளர்க்கிறாய் ஆசையாய்
பலவர்ணங்கள் கிரீடங்கள்
என நீ மகிழ்கிறாய் - ஆனால்
உன் காதலனைக் கண்டால் மட்டும்
எனைக் கடித்துத் துப்புகிறாயே
இது நியாயம் தானா
என்றது நகம்

வி.ஜெ

# சுவையான செய்திகள்

- "குரங்கு" வால் இல்லாமல் ஸ்கொட்லாந்து அஜர்லாந்து ஆகிய நாடுகளில் கிறிஸ்மஸ் கொண்டாடப்படுவதில்லை குரங்கு வால் என்றால் என்ன? கோப்பி, பால், முட்டை, பழரசம், ஐஸ், பியர், என அனைத்தும் ஒன்றாகக் கலந்து தயாரிக்கப்பட்ட குளிர் பானம் தான் குரங்கு வால் என்பது

- இத்தாலி நாட்டில் ஒருவன் தும்மினால் எதிரே இருப்பவர் வணக்கம் என்பார் பதிலுக்கு நன்றி என்று சொல்லிவிடக்கூடாது. சொன்னால் வாழ்த்தியது வீணாகிவிடும்.

- சௌதி அரேபியாவில் ஒரு பெண்ணை திருமணம் செய்துகொள்ள மணமகன் பெண் வீட்டாருக்கு வரதட்சனையாக குறைந்தது 50,000 சௌதி றியால்களும் மோதிரங்களும் 12 வளையல்களும் தோடுகள் நெக்கிளஸ், மணிக்கூடு இடுப்பு அங்கி போன்ற தங்க நகைகளும் கொடுக்க வேண்டும் குறைந்தபட்சம் இவற்றையாவது வரதட்சனையாக பெண்வீட்டிற்குக் கொடுக்காவிடின் பெண்ணே கிடையாது

- ஹொலன் நாட்டில் ஒவ்வொரு பேருந்திலும் ஓட்டுபவர் கண்ணில் படும்படியாக அவருடைய மனைவி மக்களுடைய படம் வைக்கப்பட்டிருக்கும் அதன் கீழே எங்களை நினைவில் வைத்துக்கொள், மெதுவாக ஓட்டு என்று எழுதப்பட்டிருக்கும். அதனால் தான் அங்கு பேருந்துகளின் விபத்துக்குறைவு.

- இங்கிலாந்தில் குடியானவர்கள் தங்கள் தொப்பிகளில் வைக்கோலை செருகி இருந்தால் அவர்கள் வேலை இன்றி இருப்பதாகவும் யாரேனும் வேலை கொடுத்தால் வேலை செய்வதற்கு தயாராக இருக்கிறார்கள் என்றும் பொருள்

- எத்தியோப்பியாவில் புகைப்பிடிப்பவர்களினது மூக்கை துண்டாக நறுக்கி எறிந்து விடும் தண்டனை இருந்தது

## ஜோக்ஸ்...ஜோக்ஸ்...ஜோக்ஸ்...


புரோகிதர் - என்ன உங்க பொண்ணு திருமண பேச்சு எடுக்கவே உள்ள ஓடிட்டா
தாய் - அவ கூச்ச சுபாவம் உடையவ
புரோகிதர் - உங்க பொண்ணு பரவாயில்ல திருமண பேச்சு எடுக்க ஓடின சில பேர் திருமண பேச்சு எடுக்காட்டி ஓடிர்றாங்க

சுதா - இந்த சாரி சுப்பரா இருக்கடி எப்ப எடுத்தனி
மாலா - கடைக்காரன் கவனிக்காத போது



மனைவி - (லேசான ஆதங்கத்துடன்) ''என்னைக் கல்யானம் செய்து கொள்ள வேண்டும் என்று கல்யாணத்திற்கு முன்னால் ஒப்பீஸ் வீடு பஸ் ஸ்டான்ட் என்று என் பின்னால் நீங்கள் தான் சுற்றி சுற்றி வந்தீர்கள் நினைவிருக்கிறதா?''

கணவன் - (நக்கலாக) ''நிச்சயமாக எலியைப் பிடிக்க நினைக்கும் எலிப் பொறி எலியைச் சுற்றி வருவதில்லை மாறாக சிறைப்பட்டுத் தவிக்கப் போகும் எலிதான் எலிப்பொறியை சுற்றும்



(ஒரு வகுப்பில் அனைத்து மாணவர்களும் சோம்பேறிகள்)
ஆசிரியர்: சோம்பேறிகள் எல்லோரும் எழும்புங்கள்.
(அனைத்து மாணவர்களும் எழுந்தார்கள் ஒருவனைத் தவிர)
ஆசிரியர்: நீ சோம்பேறி இல்லை என்று உணர்ந்திருக்கிறாயா?
(மகிழ்ச்சியுடன் உட்கார்ந்திருந்த மாணவனை பார்த்துக் கேட்டார்)
மாணவன்: நீங்க வேற சேர், எனக்கு எழும்பி நிற்கவே சோம்பலா இருக்கு.

## ஈழமக்களிற்காக கண்ணீர் விட்ட கவிஞர்



சொந்தமண்ணை இழப்பதென்பது எந்தவகையான இழப்புக்களையும் விட மிக மோசமானது என்பதனை நான் அனுபவத்தில் கண்டவன் நான் அந்தத் துன்பத்தை அனுபவித்தவன். காவிரி அணைக்கட்டு கட்டிய போது நீருக்குள் அமிழ்த்தப்பட்ட நான் பிறந்த ஊரான மேட்டுரை விட்டு அவ்வூரில் வாழ்ந்த நானும் என் உறவினர்கள் அனைவரும் எமது உடமைகளுடன் வெளியேறியபோது அனுபவித்த துக்கமும் ஏக்கமும் எனக்குள் இன்றும் நீங்காத வடுவாக அமைந்திருக்கிறது. நாம் ஊரைவிட்டுப் பிரிந்த இந்த வேதனை என்னை இவ்வளவு தூரம் வாட்டுகிறது வருத்துகிறது என்றால் தமது சொந்த மண்ணைவிட்டு நாட்டை விட்டு துரத்தப்பட்ட ஈழ மக்களின் மனநிலை எப்படி இருக்கும். அவர்களது சோகம் எப்படி இருக்கும். இவற்றை நினைந்து கண்ணீர்விட்டு அழுதே கன்னத்தில் முத்தமிட்டால் படத்திற்கான பாடலை எழுதினேன் என்று தினகரன் சினிமா விருது வழங்கும் வைபவத்தில் சிறந்த கவிஞருக்கான விருதினை பெற்றுக் கொண்டு உரையாற்றிய போது கவிப்பேரரசு வைரமுத்து தெரிவித்தார்

# உலகை உலுக்கியடித்த உகண்டா ஜனாதிபதி உலகைவிட்டுச் சென்றார்

உகண்டாவின் முன்னால் ஜனாதிபதியும் சர்வாதிகாரியுமான இடி அமீன் (78வயது) 17-08-03 அன்று ஜித்தா நகரில் உள்ள மன்னர் பைஸல் வைத்தியசாலையில் மரணம் அடைந்தார்.

கடந்த ஜுலை மாதம் 18ம் திகதி ஹோமா நிலையில் உயர் குருதி அமுக்க நோயினால் பாதிக்கப்பட்டிருந்த இவர் மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார். இரண்டு சிறு நீரகங்களும் செயல் இழந்தமையினால் இடி அமீன் உயிர் இழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன இடி அமீனின் சிறுநீரகங்கள் உடனடியாக மாற்றப்பட வேண்டும் என்று அவரது மகன் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார்.

இதனை அடுத்து இரண்டு சிறுநீரகங்களை தானம் செய்வதற்கு உகண்டாவின் தலைநகர் கம்பலாவைச் சேர்ந்த இருவர் முன்வந்தனர். ஆனால் உகண்டாவில் தற்போதைய ஜனாதிபதி கிருன்டாசிவேஜினி 5 இலட்சம் உகண்டா வாசிகளைக் கொன்று குவித்த கொடுங்கோலாட்சி புரிந்த இடி அமீனுக்கு எவரும் சிறுநீரகம் வழங்கக் கூடாது என கடும் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

1925ஆம் ஆண்டு பிறந்த இடி அமீன் ஒன்பது வருடங்கள் குத்துச் சண்டை வீரராக இருந்துள்ளார் 1979இல் உகண்டாவில் இருந்து வெளியேறி தன்சாணியாவில் குடிபுகுந்தார் ஏறத்தாழ 10 ஆண்டுகளின் பின்னர் சவுதி அரோபியாவில் தஞ்சம் புகுந்தார்.

இடி அமீனின் ஆட்சி உகண்டாவை மட்டுமல்லாது உலக நாடுகள் அனைத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சித்திரவதை கொலை என்பவற்றைப் பொழுது போக்காகக் கொண்டிருந்த இடி அமீனின் ஆட்சி அந்த மண்ணில் முற்றுப் பெற்றதை உகண்டா மக்கள் அப்போது பெரும் ஆரவாரங்களுடன் கொண்டாடி மகிழ்ந்தனர்.



1979 ஆம் ஆண்டு இடம் பெற்ற மக்கள் எழுச்சியின் போது இடி அமீன் உகண்டாவை விட்டுத் துரத்தியடிக்கப்பட்டார். ஹஜ்ஜி அலி., அமுலா என்ற இடி அமீனின் இரு புதல்வர்களும் இரக்க சுபாவம் உடையவர்கள் என்று கூறப்படுகிறது.

இடி அமீனின் மூத்த சகோதரனான ரமதான் உகண்டாவில் மரணமானபோது அவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக இடி அமீன் உகண்டாவுக்கு சென்றிருந்தார்.

இடி அமீன் எந்தக் குற்றமும் செய்யப்படவில்லை என அவரது மூத்த மகனான ஹஜ்ஜி அலி கூறியுள்ளார். தனது தந்தை நிரபராதி என்று நிரூபிக்க உகண்டா தலைநகர் கம்பலாவிலுள்ள அரண்மனையில் ஏதாவது ஆவணங்கள் கிடைக்க மாட்டாதா என்ற நப்பாசை அவரிடம் இருந்து வந்துள்ளது. இதனால் அடிக்கடி அங்கு தேடுதல் நடத்தியும் வந்துள்ளார். இறுதி மூச்சுவரை நீதி பதியிடம் மண்டியிடாத இடி அமீன் இன்று மரணமடைந்துள்ளார். ஒரு முறை ஸ்கொட்லாந்து நாட்டின் மன்னராகத் தன்னை அறிவித்துக் கொண்டார், ஐ.நா.பொதுச் செயலாளராக அப்போது இருந்த குர்த் வால் ஹெய்முக்கு கடிதம் எழுதி ஐ.நா.தலைமையகத்தை அமெரிக்காவில் இருந்து வேறு நாட்டுக்கு மாற்றப் போவதாக மிரட்டினார். உகண்டாவில் உள்ள விக்டோரியா எலியில் உள்ள ஒரு தீவு மீது விமானப் படையை அனுப்பி



குண்டு வீசச் செய்தார். பின்னர் அந்தத் தீவைக் கண்டுபிடித்து அதை உலகிற்கு தான் அறிமுகப்படுத்துவதாகப் பிரகடனம் செய்தார்.

1972ஆம் ஆண்டு கடவுள் தன் கனவில் தோன்றி உகண்டாவை கறுப்பர் நாடாக மாற்றச் சொன்னதாகக் கூறி உகண்டா நாட்டில் இருந்த இந்தியர், பாகிஸ்தானியர் 40 ஆயிரம் பேரை விரட்டியடித்தான். உகண்டா என்ற பசுவிடம் இவர்கள் பால் மட்டும் கறக்கிறார்கள், அதற்கு தீனி போடுவதில்லை என்று குற்றம் சாட்டினார்.

உகண்டாவில் ஹிப்பிகளுக்கும் மினிஸ் கேர்ட், குட்டைப் பாவாடைகளுக்கும் இவர் தடை விதித்தார் சவுதி அரேபிய அரசக்குடும்பத்தினர் ஒருவரது இறுதிச் சடங்கில் இடுப்பில் மட்டும் ஆடை அணிந்து வந்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

ஒரு முறை உகண்டா விலங்கியல் காட்சிச்சாலையில் இருந்த மலைப்பாம்பைப்பிடித்து வந்து அதை இரவு உணவாக்கிக் கொண்டவர் இடி அமீன்.

பலஸ்தீன தீவிரவாதிகளுக்கு உகண்டாவில் இவர் அடைக்கலம் அளித்தார். 1976 ஆம் ஆண்டு இந்தத் தீவிர வாதிகள் பிரான்ஸ் பயணிகள் விமானத்தை 100 பயணிகளுடன் உகண்டா நாட்டின் தலைநகரமான கம்பாலவுக்கு கடத்தி வந்தனர். விமானப் பயணிகளில் கணிசமானோர் இஸ்ரேல் நாட்டு யூதர்கள் இஸ்ரேல் அதிரடி இராணுவ நடவடிக்கை மூலம் விமானப்பயணிகளை மீட்டு இடி அமீன் முகத்தில் கரியைப் பூசியது.

புனிதமாக இருந்த உகண்டா நாட்டை புழுதிக்காடாக்கிய பூதாகரமான மனிதர் இடி அமீன், பதவியிழந்து சவுதி அரேபியாவிற்கு ஓடிய பிறகும் அவர் சும்மா இருக்கவில்லை. நான் மீண்டும் வந்து ஆட்சியைப் பிடிப்பேன் என்று அடிக்கடி பயமுறுத்தி வந்தார் தற்போது அவர் மரணமடைந்து விட்டதால் உகண்டா மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றார்கள்

1979ம் ஆண்டு ஜவரி 25ம் திகதி இராணுவப் புரட்சியில் ஈடுபட்டு தனது அரசியல் குருவும் உகண்டா அதிபருமான மில்டன் ஒபோட்டேவின் ஆட்சியைக் கவிழ்த்து இடி அமீன் அதிகாரியானார். ஹிட்லர் எனக்கு பெரியப்பா என்று முழங்கினார்.

ஒபோட்டேவின் இனத்தவர்களால் தனக்கு ஆபத்து வரும் என்று கருதி அவர்களில் 5 இலட்சம் பேரை இடி அமீன் படுகொலை செய்தார். உகண்டாவின் கிறிஸ்தவ தலைமைப் பேராயர் இராணுவ அதிகாரிகள் பலரும் இவரது கொலை வெறியாட்டத்துக்கு இரையாகினார்கள். சிறைக்கைதிகளை சுத்தியல் மூலம் தலையில் அடித்துக் கொல்வது இவரது பிடித்தமான பொழுது போக்கு.

எதிரிகளின் தலைகளை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து அவ்வப்போது எடுத்து அழகு பார்ப்பதும், இறந்த உடல்களை புகைப்படம் பிடித்து அல்பத்தில் வைப்பதும் இவரது வழக்கம். மனித மாமிசம் (நரமாமிசம்) தின்னும் பழக்கமும் இடி அமீனுக்கு இருந்ததாகக் கூறப்படுகின்றது. இராணுவத்தின் மிக உயர் பதவியான பீல்ட் மார்ஷல் பட்டத்தை இடி அமீன் தனக்குத் தானே சூடிக்கொண்டார். இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்படும் பதக்கங்களை தயாரித்து அணிந்து கொண்டார்.

இடி அமீனுக்கு அதிகார பூர்வமாக மட்டும் 5 மனைவிகள் இருந்தார்கள். 24க்கும் மேற்பட்ட குழந்தைகள் உண்டு. இதைத் தவிர அதிகார பூர்வமற்ற மனைவிகள் அவருக்கு ஏராளம்.

இடிா அமீன் ஒரு புறம் சர்வாதிகாரியாக இருந்தாலும் மறுபுறம் கோமாளி* போலவும் நடந்து கொண்டார். இங்கிலாந்து ராணி வழங்கும் நைட் பட்டத்தை இவர் தனக்குத்தானே சூடிக் கொண்டார்.

## மீன்பாடும் தேன்நாடாம் மட்டுநகரின் மாவீரன் பத்மறீ சான்டோ றீதாசின் சில வீர தீரச் செயல்கள்



28 நிறைஉடைய இரும்புக் குண்டுகளை 10அடி உயரத்தில் இருந்து வயிற்றின் மேலே போடுவதை படத்தில் காண்கிறீர்கள்.




20 நிமிடங்களில் 7 இரும்புக் கம்பிகளை மூக்கின் மேலே வைத்து வளைத்து சாதித்ததையே படத்தில் காணலாம்.



இவர் வீரச்செயல்களை புருவதற்கு அடியெடுதத்துக்கொடுத்த புண்ணிய புருஷரும் அவரின் பேரனுமான இரும்பு மனிதர் சங்கரதாஸ் அவர்களை படத்தில் காண்கிறீர்கள்.

நீங்களுமஂ சாகசங்கள் புரிய இந்த மாவீரரின் சுவையான பேட்டி அடுத்த வாரம்.



# பூவையர் உலகம்

## சமையல் உணவில் மருந்துண்டு

நாம் உதாசீனப்படுத்துகின்ற சித்த மருத்துவம் இப்போது ரஸ்யாவில் பிரபலமடைந்து வருகின்றது. கடந்த சில ஆண்டுகளாக நாம் அன்றாடம் பயன்படுத்தும் காய்கறிகள், தானியங்கள் போன்றவற்றை நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்படுத்தி வருகிறார்கள் ரஷ்யர்கள். அவர்களது மருந்துகள் சில இங்கே தொகுத்து தரப்பட்டுள்ளது

**கடும் தலைவலி ஏற்பட்டால்**

சிறிது பஞ்சை எடுத்து பீட்ரூட் சாற்றில் நனைத்து காதுக்குள் வைத்துக் கொள்ளுங்கள். இரவில் உணவருந்திய பின் ஒரு தேக்கரண்டி தேன் சாப்பிடுங்கள் நிம்மதியாகத் தூங்கலாம்.

**கடும் ஜலதோஷமா**

வெதுவெதுப்பான பீட்ரூட் சாற்றை மூக்கினுள் தடவினால் போதும் பலவீனம், மூல வியாதி, வலிப்புநோய், காசநோய் ஆகியவற்றை குணப்படுத்த வெள்ளைப் பூண்டு சிறந்தது. இது இருபதுக்கு மேற்பட்ட மருத்துவ குணங்களை கொண்டது. அறுபதுக்கு மேற்பட்ட பிணிகளை குணப்படுத்தக் கூடியது.

**பல்வலி வந்தால்**

ஒரு பூண்டை உரித்து பாதியை உங்கள் மணிக்கட்டில் நாடித்துடிப்பில் பார்த்துக் கட்டி விடுங்கள். இறுக்கமாய் கட்டுங்கள் இடது பக்க பல்லில் வலி என்றால் மணிக்கட்டின் வலதுபக்கம் பூண்டை கட்டுங்கள். வலி வலது பக்கமெனில் இடது பக்க மணிக்கட்டில் கட்டுப்போடுங்கள். சரியான படி சிறுநீர் வெளியேராமல் அவதிப்பட்டால் அதைப் போக்குவதற்கும், லேசான பேதி உண்டாவதற்கும் பூண்டைப் பயன் படுத்தும்படி பண்டைய மருத்துவர் ''உறிப்போ கிராட்டஸ்'' சிபாரிசு செய்துள்ளார். பூண்டைத் தொடர்ந்து பயன் படுத்தி வந்தால் இது பல நோய்களிலிருந்தும் மனிதனது உறுப்புகளைப் பாதுகாக்கின்றது என்று இன்றைய மருத்துவர்களும் ஒப்புக் கொள்கின்றனர்.

**உடம்பில் கழலையா**

இருக்கவே இருக்கிறது முட்டைக் கோவாசாறு. வலி ஏற்பட்ட மூட்டுக்களில் புத்தம் புதிய முட்டைக் கோவா இலைகளை சிறுசிறு துண்டுகளாக்கி முட்டையின் வெள்ளைக்கருவுடன் கலந்து காயங்கள் புண்கள் நீர்க்காயங்கள் மீது தடவுங்கள் உடனடி நிவாரணம் கிட்டும் வீக்கத்தைப் போக்க பயன்படுத்துங்கள். வலி குறையும் காயங்களில் உள்ள சீழை சுத்தப்படுத்தும் முள்ளங்கித் துண்டுகளை அல்லது முள்ளங்கிச்சாறு ஆகியவையும் இந்த சிகிச்சைக்குப் பயன்படும்.

பாத்தும்மா ரைஹானா
லவ் லேன்
திருகோணமலை

## தேவையற்ற சிசு



தேவையற்ற சிசுவைத் தவிர்ப்பதென்பது எப்போதுமே சுலபமல்ல. கருவைச் சிதைக்க வேண்டுமென ஏற்கனவே தீர்மானித்தவர்களுக்கு கருமுதிர்ந்த நிலையில் உள்ளே வாழும் போது வேறு விருப்புக்கள் கிடையாது தாய்மைக்கு தாங்கள் இன்னும் தயாரில்லை என்று நினைப்பவர்கள் நடை முறைகளினூடாகச் செல்ல வேண்டுமென உணர்வார்கள் ஆனால் காரணங்கள் எதுவாக இருந்தாலும் கருச்சிதைவுகள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன கர்ப்பம் குறித்த எதிரொலியை ஒருகணம் சிந்தித்துப்பார்த்தால், கருச்சிதைவை எதிர்க்கவே தோன்றும். கருத்தடைக் கருவிகள் ஏராளமாக விற்பனைச் சந்தையில் கிடைக்கும் வேளையிலும் குடும்பத்திட்டச் சங்கம் கருத்தடை வில்லைகளை அறிமுகப்படுத்தும் போதும் கர்ப்பத்தை தடுப்பதற்குப் பல வழிகள் இருக்கின்றன கருச்சிதைவை அறிமுகப்படுத்தும் நிறுவனங்கள் கொழும்பு நகரில் ஏராளமாகவே இருக்கின்றன பம்பலப்பிட்டியில் உள்ள கருச்சிதைவு மருத்துவ நிலையத்தில் ஒரே தடவையில் இரண்டு அல்லது மூன்று யுவதிகளுக்கு கருச்சிதைவு சத்திர சிகிச்சை நடைபெறுகின்றது. ஒரே அறையிலேயே சத்திர சிகிச்சை நடைறெுகின்றது. நோவைக் குறைக்கும் மாத்திரைகள் உபயோகப்படுத்து வதில்லை. ஆனால் சிகிச்சைக்குப்பின் இரத்தக் கசிவை தடுப்பதற்கு உடல் நலத்திற்கேற்ப குறுந்துணி வழங்கப்படும் எவ்வகையிலேனும் ஆயிரக்கணக்கான பெண்கள் இச்சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வெளியே கியூவில் நிற்பார்கள் கருச்சிதைவுக்கான இரண்டாவது மருத்துவமனையும் பம்பலப்பிட்டியிலேயே உள்ளது அங்கு ஒரு சத்திர சிகிச்சைக்கு 6000/= முதல்

> **யுவதியொருவர் பாலியல்வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு அவர் கர்ப்பமுற்ற போதிலும் கூட கருசிதைவுக்கெதிராக இந்த மதத்தவர்கள் கோஷமிடுவார்களே தவிர உதவிக்கு முன்வருவதில்லை**

8000/= வரை நோயாளியிடம் இருந்து அறவிடப்படும். வேதனையைக் குறைக்கும் மாத்திரைகள் உபயோகப்படுத்தப்படும். சிகிச்சைக்குப் பின் நோயாளி சில மணி நேரம் தடுத்து வைக்கப்படுகிறார். சுமுகமான நிலை ஏற்படும் வரை அடிவேதனை ஒருவருக் கொருவர் மாறுபடும். சத்திர சிகிச்சைக்காக யுவதியுடன் வந்த ஒரு வாலிபன் இவ்வாறு தெரிவித்தான்.

மற்றுமொரு நோயாளியுடன் வந்த அவரது நண்பர் ஒருவர் இவ்வாறு கூறினார். சத்திர சிகிச்சைக்குப் பின் பல வருடங்கள் பிடித்தன. எந்த ஒரு ஆண் மகனையும் தன்னைத் தொட அனுமதிப்பதில்லை ஆண்களில் வெறுப்புடனேயே பல வருடங் களைக் கழித்தார். அந்தப் பெண்ணின் நண்பர் இவ்வாறு கூறினார்

குடும்பதிட்டச் சங்கத்தின் பணிப்பாளர் பஸநாயக்க அவரது தனிப்பட்ட கருத்தை இவ்வாறு தெரிவித்தார். "கருச்சிதைவு சட்டமூலமாக்கப்பட வேண்டும் கருச்சிதைவுகள் தினமும் நடைபெருகின்றன இதனை நிறுத்த எவாரலும் முடியாது அரசாங்கம் இதனை சட்டமூலமாக்க வேண்டும் அல்லது கருச்சிதைவுகள் வெளியரங்கமாக நடைபெறுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் கருச்சிதைவு சட்டவிரோதமானது என அரசாங்கம் சொல்கிறது ஆனால் கருச்சிதைவுகள் தினமும் நடைபெறுகின்றன" இவ்வாறு பணிப்பாளர் பஸநாயக்க தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில் சட்டவிரோதமான கருச்சிதைவுகள் துரிதமாக நடைபெறுவதனால் உயிர்ச்சேதம் ஏற்படவும் இடமுண்டு என்கிறார். சில மதங்கள் கருச்சிதைவில் நம்பிக்கை கொள்வதில்லை யுவதியொருவர் பாலியல்வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு அவர் கர்ப்பமுற்ற போதிலும் கூட கருசிதைவுக்கெதிராக இந்த மதத்தவர்கள் கோஷமிடுவார்களே தவிர உதவிக்கு முன்வருவதில்லை என்கிறார் கலாநிதி பஸநாயக்க.

ஆங்கில மூலம் -ரிசிட்ரா மெண்டிஸ்

## பெண்விடுதலை



சகலதுறைகளிலும் இன்று பெண்கள் முன்னேறிவருகின்றார்கள் தான் ஆனால் எத்துறையை எடுத்துக் கொண்டாலும் அங்கெல்லாம் பெண்கள் ஆண்வர்க்கத்தால் அவஸ்த்தைப் படவேண்டித்தானே உள்ளது. இதனால் பெண்களிற்கு சில விடயங்களில் உரிமையில்லாதிருப்பது காணக்கூடியதாக இருக்கின்றது. இன்று உலகில் பாலியல் வல்லுறவு என்பது தலைவிரித்தாடுகின்றது. எங்கும் பாலியல் எதிலும் பாலியல் இது பெண்ணினத்திற்கே உரித்தான சாபக்கேடாக மாறிவிட்டது, சிறியவர்களில் இருந்து முதியவர்கள் வரை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்படுகின்றார்களே இதில் இருந்து பெண்ணினம் விடுதலை பெறக் கூடாதா? இதேபோன்றே பெண் கடத்தல்களும் இன்று உலகில் மலிந்து விட்டன.

இன்று சீதனப்பிரச்சனையினாலே பல இளம்பெண்கள் அவதிப் படுவதும் அடக்கி ஒடுக்கப்படுவதும் தான் என்ன? "சீதனம் எதுவும் வேண்டாம் சீதேவி நீமட்டும் வந்தால்போதும்" என்று திருமணம் செய்யும் ஆண்கள் திருமணத்தை அடுத்து கேட்பது தான் என்ன? இந்த சீதனக் கொடுமையால் குறிப்பாக ஏளை என்ற காரணத்தால் வரனில்லாமல் சோகதத்தில் வாழ்கின்றார்கள். இந்த மோசமான நிலமையையெல்லாம் கண்டு கொண்டு பெண்களை எந்த சிறையில் அடைத்து வைத்திருக் கின்றோம்? விடுதலை செய்வதற்கு என்று கேள்வி கேட்பது கேலிக்கூத்தாகத்தான் இருக்கின்றது.

பெண்கள் பூப்போன்றவர்கள். அவர்களைப் பாதுகாப்பதற்கு சில முட்கள் வேண்டுமாம். முட்களாய் இருந்துதான் பாதுகாக்க வேண்டுமாம். அது ஒருபுறமிருக்க முட்களாய் இருப்பவர்கள் விசமுட்களாயும் மாறிவிடுகின்றார்களே அது ஏன்? பூக்கள் என்று கருதி அடிமையாய் கட்டுப்படுத்தி வைத்திருப்பது நீதியா? இல்லை அதுதான் கட்டுக்கோப்பா? பெண்விடுதலைபற்றி தப்புக்கணக்குப் போடுபவர்களே நீங்கள் முதலில் திருந்தப்பாருங்கள். அதற்கு அடுத்ததாய் பெண்களை திருத்த வேண்டிய இடங்களில் திருத்துங்கள்.

படித்த ஆண்களே நீங்கள் படித்தது நல்ல உயர்ந்த தொழில் பார்ப்பதற்கு மட்டுமல்ல உலக நடப்பு நிலை யதார்த்தம் எல்லாம் அறிந்து வாழ்க்கையில் முன்மாதிரியாக இருப்பீர்கள் என்று தானே. உயர்ந்த தொழில் பார்க்கின்றீர்கள் என்பதற்காக உயர்ந்த சீதனத்தை அல்லவா எதிர்பார்க்கின்றீர்கள். இதை ஈடுசெய்ய முடியாத பெண்கள் யதார்த்தத்தை புரிந்து கொள்ளமுடியாத ஆண்களிடம் சிக்கி வாழ்வில் நொந்து மேற்படி போரட்டதத்தில் இறங்குகிறார்கள். இப்போரட்டத்தை நிறுத்த வேண்டுமாயின் சீதனம் வாங்கவே

மாட்டோம் என்ற ஆண்மையுள்ள வார்த்தையில் திடசங்கற்ப்பம் பூண்டு பூவையரின் மனங்களை பூத்துக்குலுங்க செய்யுங்கள்.

திருமதி. பூபதி
வெள்ளவத்தை

## தாதிமார்களுக்காகவா நோயாளர்கள்?

வைத்திய சாலைகளில் நோயாளர்கள் அவர்களது நோயினால்படும் வேதனையைவிட தாதிமார்களின் மூலம் அனுபவிக்கும் இம்சைகள் தான் அதிகம் இத்தகைய இம்சைகள் வடபகுதி வைத்திய சாலைகளில் தான் அதிகமாகக் காணப்படுகின்றது.

இந்த வைத்தியசாலைகளில் மருத்துவர்களின் அதிகாரங்களைவிட தாதிமார்களின் அதிகாரங்களே மேலோங்கி நிற்கின்றன. நோயாளர்களை எப்படி அணுகுவது, அவர்களோடு எப்படி உரையாடுவது என்பதை கற்பிக்க ஒரு பயிற்சிக் கல்லூரியே வைக்கலாம் போல் இருக்கின்றது நோயாளர்களிற்கு அவர்களிற்கு கொடுக்கப்படும் வில்லைகளை விட மருத்துவர்கள் தாதிமார்கள் அவர்களோடு உரையாடும் வார்த்தைகள் வலிமை வாய்ந்தவையெனவும் அவர்கள் நோய்களை குறைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இத்தகைய உரையாடல்கள் மூலம் தான் உறுதிசெய்யப்படுகின்றன. தாதிமார்க ளிற்காக நோயாளர்கள் அல்ல மாறாக நோயாளி களிற்காகதத்தான் தாதிமார்கள் என்ற உண்மையை அவர்கள் புரிந்து கொள் வேண்டும்.

இதுகுறித்து நோயாளர்கள் சிலரிடம் கருத்துக் கோட்டபோது "எங்களை நோயாளர்கள் என்பதைத் தவிர மனிதர்களாகவே மதிப்பதில்லை அங்குபோய் நில் இங்குவந்து நில் என்று அதட்டுகிறார்கள்" எனத் தெரிவித்தார்கள்

-சுழற்சி நிருபர்

# தமிழர்கள் வாழ்வு

## யாழ் கோட்டை பற்றிய சில குறிப்புகள்

28 ஒக்டோபர் 1591

போர்த்துக்கேயர் மூன்றாவது முறையாக யாழ்ப்பாண இராச்சியம் மீது படை எடுப்பு. அக்கால மன்னனாக விளங்கியவன் "எதிர் மன்னசிங்க குமாரன்" போர்த்துக்கேய படைக்குத் தளபதியாக விளங்கியவன் "அந்திரே பூர்த்தாடுடி மென்டோன்சா"

யாழ் இராச்சியத்தின் தலை நகரமாக விளங்கியது நல்லூர்ஆகும் இன்று யாழ் கோட்டை விளங்கும் இடத்தில் முஸ்லீம் வர்த்தக சாலைகள் இரண்டு காணப்பட்டது இவற்றையும் நல்லூரில் அமைந்திருந்த இந்து ஆலயத்தையும் உடைத்தே யாழ் கோட்டை கட்டுமானப் பணிகள் செய்யப்பட்டன.

2 பெப்ரவரி 1621

"பிலிம் தே ஒலிவேறா" என்ற போர்த்துக்கேய தளபதியின் தலைமையில் யாழ் இராட்சியம் கைப்பற்றப்பட்டது. அக்காலத்தில் யாழ்ப்பாண இராட்சிய சுதந்திர கடைசி மன்னன் "சங்கிலி செகராசசேகரன்" யாழ்ப்பாணம் தன் சுதந்திரத்தை இழந்து இறுதிப் போரில் மரணமடைய நேரிட்டது நல்லூரில் பெரிய கோயிலாக தென்னிந்திய கோயில்களின் பாரிய வடிவில் பாரிய மதில் சுவரோடும் வானலாவிய ராஜ கோபுரத்துடனும் முத்திரைச் சந்தியில் நல்லூர் கந்தசாமி கோயில் அமைந்திருந்தது இன்று இவ்விடத்தில் கிறிஸ்தவ தேவாலயம் காணப்படுகிறது

போர்த்துக்கேய தளபதி இவ் இந்து ஆலயத்தை அத்திவாரத்தோடு கிளப்பும் படி கட்டைளையிட இவ்வாலயம் தரைமட்டமாகியது இக்கோயில் கற்கள் மலை போல் காணப்பட்டன இது மட்டுமன்றி வேறு பல சைவக் கோயில்களும் தரைமட்டமாக்கப்பட்டன

இவற்றைக் கொண்டே பண்ணைப் பகுதியில் கோட்டை ஒன்றை அமைக்க போர்த்துக்கேய தளபதி திட்டமிட்டான் இவ்விடத்தை அவன் தேர்ந்தெடுக்கக் காரணமாகவிருந்தது கரையோரம் மற்றும் அகழிக்கு நீர்வரக் கூடிய பிரதேசம் மற்றும் எதிரியிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ள சிறந்த இடமாகக் காணப்பட்டமையே

நல்லூரில் காணப்பட்ட கற்குவியலே முதலில் கூடார வண்டியில் ஏற்றி பண்ணைக்கு எடுத்து வரப்பட்டன பின் அவை விரைவு இல்லை என்பதால் நல்லூரில் இருந்து பண்ணை வரை மனிதச் சங்கிலியாக மக்களை நிறுத்தி வைத்து கற்களைப் பரிமாறிக் கொண்டு சென்றான் இவ்வாறே இடிக்கப்பட்ட பல சைவ ஆலயத்திலிருந்தும் கற்களைக் கொண்டு சென்றான் எஞ்சிய சைவ ஆலயங்கயளும் இடிக்கப்படும் என்பதால் யாழ்ப்பாண முதலிகளும் வன்னிமைகளும் தீவுப் பகுதியில் இருந்து தோணிகளில் முருங்கைக் கற்களை தேவையான அளவு பெற்றுத் தருவதாக ஒப்புக் கொண்டார்கள் ஒவ்வொரு தோணி முருங்கைக் கற்களுக்கும் 3 பணம் வழங்கப்பட்டது

கோட்டை கட்டுமானப் பணி வருடத்தில் 9 மாதங்களே நடத்தப்பட்டன ஏனைய மழை காலங்களில் வேலை நிறுத்தப்பட்டது போர்த்துக்கேய மேசன்மாருடன் உள்ளூர் மேசன்மாரும் கட்டுமானத்தில் ஈடுபட்டனர்

கோடை காலத்தில் ஏற்பட்ட வைசூரியும் மழை காலத்தில் எற்பட்ட பேதி நோயும் சில வேளைகளில் கட்டுமாணப் பணியை தடை செய்தன

எனினும் 1625 ம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டை இன்று இருப்பது போல் நட்சத்திர வடிவம் போன்றதல்ல சதுர வடிவக் கோட்டையாகும் நான்கு மூலைகளிலும் 4 கொத்தளங்கள் காணப்பட்டன இக் கொத்தளங்கள் அரைச்சந்திர வடிவ மதில்களால் இணைக்கப்பட்டிருந்தன மதில்கள் 16 அடி அடித்தள தடிப்பும் 20 அடி உயரமும் 4 உச்சித் தடிப்பும் கொண்டிருந்தன மதிலின் இடைத் தூர உச்சியில் காவலரண்கள் அமைக்கப்பட்டிருந்தன

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் 150 பறங்கி வீரர்களைக் கொண்ட 3 பட்டாளங்கள் இருந்தன

தொடரும்

**வன்னியூரான் கபில்**

குறிப்பு --இத் தொடர் செங்கை ஆழியானின் களம்பல் கண்ட யாழ் கோட்டை மற்றும் யாழ்ப்பாண இராச்சியம் -க.குணராசா

அவர்களின் நூல் தொகுப்பையும் ஆதாரமாக வைதத்து வழங்கப்டுகின்றது

# ஏமாற்றப்பட்ட தமிழினம்



தொடர் -4

இலங்கை தேசிய காங்கிரஸ் உடன்படிக்கையை செயற்படுத்த முன்வராது காலம் கடத்தியதை கண்டித்து இலங்கை தேசிய காங்கிரஸ் குழுவிற்கு தலைமை தாங்கி யாழ்ப்பாணம் வந்து உடன்படிக்கை செய்துகொண்ட சி.ஈ.கொறியாவின் தம்பி விக்டர் கொறியா காலியில் நடைபெற்ற இலங்கை தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கடுமையாக சாடிப் பேசினார்.

தேசிய காங்கிரஸ் தலைவர்களை நம்ப முடியாது சிங்கள தலைவர்களினது சொல் செல்லாக் காசு போன்றது என்று தமிழர்கள் கருதுகின்றார்கள் அதன் கருத்தை வலியுறுத்துவது போல நடக்கப் போகிறீர்களா? என்று கேள்வியெழுப்பினார்.

மனிங் சீர்திருத்தத்தை இலங்கை தமிழர்களின் கோரிக்கை. நிறைவேற்றப்படவே இல்லை சிங்கள பிரதிநிதித்துவத்தில் 2:3 பங்காவது தமிழர்களுக்கு ·வழங்க வேண்டும் என்ற கோரிக்கை சிங்கள தலைமையின் பேரினவாதப் போக்கினால் கருகிப்போயிற்று இலங்கை தேசிய காங்கிரஸ் கரையோரச் சிங்களவர் காங்கிரஸ் என்பதனை மெய்ப்பித்தது.

அதையடுத்து 1931இல் வந்த டொனமூர் அரசியல் திட்டம் 1947 வரை நிலைத்தது. பெரும்பான்மை சிங்களமக்களின் பிரதிநிதித்துவத்தை பெருமளவில்வீங்கச் செய்து இன முரண்பாடுகளை பூரணப்படுத்தியது இவ் அரசியல் சட்டத்திற்கு பெரும்பங்குண்டு. தமிழர்கள் தனி வழி அரசியலை நாடிச் செல்ல இதுவும் ஒரு காரணமாகியது. பிரதேச வாரி பிரதிநிதித்துவம் தமிழர்களின் உறுப்புரிமையை அரசாங்கச் சபையில் வலுவாகக் குறைத்ததால் சிறுபான்மையினராக இருந்த தமிழா் இரண்டாம்தரத்திற்கு தள்ளப்பட்டனா். இச்சட்டத்தின் கீழ் அமைந்த 1936ன் அமைச்சரவை தமிழரின் உறுப்புரிமையின் வலுவற்ற நிலையை வாய்ப்பாகக் கருதி தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை அமைக்க திட்டங்களை தீட்டியது அவ் அமைச்சரவையில் காணி

> **பிரதேச வாரிப்பிரதிநிதித்துவம் தமிழர்களின் உறுப்புரிமையை அரசாங்க சபையில் வலுவாகக் குறைத்ததால் சிறுபான்மையினராக இருந்த தமிழர் இரண்டாந்தரத்திற்குத் தள்ளப்பட்டனர் இந்நிலையை வாய்ப்பாகக் கருதி தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேந்நங்களை அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டது.**

வேளாண் அமைச்சராக இருந்த டீ.எஸ். சேனநாயக்க தமிழரின் பாரம்பரிய நிலமான கந்தளாய் பாவற்குளம் பகுதிகளில் வேளாண் துறை விருத்தி எனும் போர்வையில் சிங்களக்குடியேற்றங்களிற்கு கால் கோலிட்டார். இதனால் 1926ம் ஆண்டு குடிமதிப்பு கிழக்கு மாகாணத்தில் 0.5 வீதமாக இருந்த சிங்களவர் குடித்தொகையை அடுத்து எடுக்கப்பட்ட மதிப்பீட்டில் 4வீதமாகியது. டொணமூர் அரசியல்திட்டத்தின் கீழ் 1936ல் அமைந்ததனிச் சிங்கள அமைச்சரவை தமது பேரினவாதப் போக்கினை காட்டத்தவறவில்லை 1943ல் ஆங்கில மொழிக்கு மாற்றாக சிங்களம் மட்டும் ஆட்சிமொழியாக அமைய வேண்டும் என்று ஜே.ஆர்.ஜெயவர்தன அரசாங்க சபையிலே தீர்மானம் கொண்டுவந்தார்

ஆனால் விவாதத்தின் போது ஆங்கிலத்திற்கு மாற்றாக தமிழ் சிங்களம் இரண்டுமே ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும் இருக்க வேண்டும் எனும் திருத்தம் மட்டக்களப்பு உறுப்பினர் வீ.நல்லையாவால் முன்மொழியப்பட்டு எஸ்.டபிள்யூ. ஆர்.பண்டாரநாயக்காவினால் வழிமொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது. ஆனால் இலங்கையின் சுதந்திரத்தின்பின் சிங்களம் மட்டும் சட்டத்தை 1944 டிசம்பரில் சோல்பரி தலைமையில் இயங்கிவந்த உசாவற்குழு 1945 ஏப்ரல் மாதம் வரை இலங்கையின் பல்வேறு சமூகத்தை சேர்ந்தவர்களினதும் கருத்தைக் கேட்டறிந்தது. 1936ல் இருந்து 1942 வரை ஆட்சியில் இருந்த தனிசிங்களவர் அமைச்சரவை செயற்பாடுகளினால் பெரும் பின்னடைவுகளை சந்தித்த இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் ஒன்று சேர்ந்து 50:50 என கோரிக்கையை சோல்பரியின் முன்னே வைத்தனர் பெரும்பான்மை சிங்களவாிற்கு 50வீத உறுப்புரிமையும் ஏனைய சிறுபான்மையினருக்கு (இநதியத் தமிழர் உட்பட) 50வீத உறுப்புரிமையும் கொடுக்கப்பட வேண்டும் என்பதே 50:50 கோரிக்கையின் நிலைப்பாடாகும்

அன்றை காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் கோரிக்கையை முன்வைத்து வாதாடினார் எனினும் இலங்கைத்தீவின் சிங்களத் தமிழ் மக்களின் வரலாற்றுப் பின்னணியை சரிவர உணர்ந்து கொள்ளாத சோல்பரிக் குழுவினர் சிங்களவருக்கு கட்டற்ற உரிமைகளை வாரி வழங்கும் அடிப்படை அரசியற்திட்டத்தை வகுத்துச் சென்றனர் பிற்காலத்தில் இனப்பிரச்சனை கூர்மையடைந்து




பெரும் மோதல்களும் இரத்த ஆறும் ஓடத் தொடங்கியபோது தான் தான் செய்த தவறுகளை சோல்பரி அவர்கள் உணர்ந்து காலங்கடந்த பின்னர் வருத்தம் தெரிவித்தார். பி.எச்.பாமர் எழுதிய சிலோன் ஏடிவைடன் நேஷன் என்ற நூலிற்கு முகவுரை எழுதியபோது அதில் சோல்பரிஇப்படிக் குறிப்பிடுகிறார்

ஏமாற்றம் தொடரும்.

தருவது சத்தியா.

சென்ற வாரத் தொடர்...

# பலவீனம்




**இன்றைக்கு இரவு தன் மனைவிக்கு செய்யப்போகும் துரோகம் தான் இந்த நடுக்கத்திற்கு காரணம் என்பது அவனுக்கு மட்டும் தான் தெரியும்**

பின்னேரம் அலுவலகத்தில் இருந்து திரும்பும் போதே படபடப்பாகத்தான் இருந்தான். அவன் மனைவி அவனை சாதாரணமாகப் பார்க்கும் போதெல்லாம் ஏதோ தன்னை சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதாக வீணே உதறல் எடுத்தது. இன்றைக்கு இரவு தன் மனைவிக்கு செய்யப்போகும் துரோகம் தான் இந்த நடுக்கத்திற்கு காரணம் என்பது அவனுக்கு மட்டும் தான் தெரியும் "ஏனப்பா உங்களுக்கு இப்படி வியர்க்குது?" என்று நாலைந்து தடவைகள் கேட்டும் விட்டாள் "சீச்சீ எனக்கொன்றுமில்லை என்று சமாளித்தாலும் கூட அவன் அவள் முன் இஞ்சி தின்ற குரங்காட்டம் நின்ற சந்தர்ப்பம்தான் அதிகம் இடைக்கிடை நேரத்தைப் பார்த்துக் கொள்கிறான் "அம்மா ஏனம்மா அப்பா இன்றைக்கு என்னமோ போல் இருக்காரு" என்று அவனது ஐந்து வயது மகள் தன் தாயிடம் கேள்விக் கணை தொடுக்கும் அளவுக்கு இன்று அவனது நிலைமை மாறிப்போச்சு எல்லாம் பாழாய்ப் போன அந்த பலவீனம் தான். அவனுடைய மாமனாரும் மாமியாரும் வேறு அடிக்கடி அவன் மீது தங்கள் அவதானத்தைச் செலுத்திக் கொண்டு தான் இருக்கிறார்கள் "மருமகனுக்கு ஏதாவது சுகமில்லையா" என்று அவன் மனைவியிடம் அவளது தாய் குசினிக்குள் வைத்து கேட்டது அவன் முதுகுக்குப் பின்னால் ஒலிக்கிறது அவன் அவஸ்த்தையுடன் நெளிந்தான். இத்தனைக் குள்ளும் அவனது உணர்வலைகளுக்குள் அடிக்கடி அந்த முகம் தோன்றி மறைகிறது அதைப் பலர் கண்டிருந்தாலும் தனக்குமட்டும் தான் புரியவில்லை என்று தோன்றியது எப்படியோ நேரம் ஒன்பதாகிறது


இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எல்லோரும் விறாந்தையில் இருக்க அவனது மனைவி குசினிக்குள் பால் சூடாக்கிக் கொண்டிருக்கிறாள் அவன் பூனை நடைநடந்து குசினிக்குள் நிற்கும் மனைவியுடன் பேச்சுக் கொடுக்கின்றான் அவள் ஒவ்வொருவருக்கும் டம்ளரில் பாலை ஊற்றியபடி அவன் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறாள் பின்பு உறங்க ஆரம்பித்த தங்களது குழந்தைக்கு தருவதற்காக ஒரு டம்ளர் பால் எடுத்துக் கொண்டு விறாந்தைக்குச் சென்ற போது நடுவில் கிடைத்த சில வினாடிகளில் அவன் அதைச் செய்கின்றான். சரையில் இருந்த நித்திரைக் குளிசைகளை தன் மனைவிக்கும் மாமனாருக்கும மாமியாருக்கும் அளந்து போட்டு விட்டு ஒரு டம்ளர் பாலோடு நல்ல பிள்ளையாக வந்தமர்கிறான் இனியென்ன எல்லோரும் குறட்டை விடப்போகிறார்கள் அச்சந்தர்ப்பத்தில் அவன் போய் தன் ஆசையைத் தீர்த்துவிட்டு நல்ல பிள்ளையாக வந்து விடவேண்டும் அவ்வளவுதான் போகிறான்.

இரவு மணி பதினொன்று பத்து அவன் ஒழுங்கைத் தலைப்பில் தனது சைக்கிளை வைத்துவிட்டு கையிலிருந்த டோச் வெளிச்சத்தை அடித்தபடி மெல்ல மெல்ல அந்த வீட்டை நோக்கி நடக்கின்றான் அவன் முன்னேயும் பின்னேயும் இருள் இவனது பாதங்களின் சரசரப்புக் கேட்டு தெரு நாய்கள் ஊளையிடத் தொடங்கின இவனுக்குள் படபடப்பு ஆரம்பமாகியது இருந்தாலும் தைரியமாக நடந்து அந்த வீட்டின் முன் வந்து நிற்கின்றான் வளவுக்குள் வீட்டைச் சுற்றி கும்மென்று இருட்டாக இருந்தது இருமுறை தன்னைச் சுற்றி ஆராய்ந்தான் தன்னை எவரும் பார்க்கவில்லை என்பதை உறுதி செய்து கொண்டவன் திடும்மென்று வளவுப்படலை மீதேறி வளவுக்குள் குதித்தான் காலையில் அத்தனை குரைப்புடன் ஆர்ப்பாட்டம் செய்த அந்த நாயிடமிருந்து எந்த ஒரு அரவமுமில்லை அவன் அதன் மீது டோர்ச்சை அடித்தான் அது மிகவும் கஸ்டப்பட்டு தலையைத் தூக்கி இவனை ஒரு முறை நிமிர்ந்து பார்த்து விடடு பலவீனமான நிலையில் படுத்துவிட்டது பக்கத்தில் தண்ணீர் வாளி காலையில் பார்த்தது போல் வெறுமையாகக்கிடந்தது அவன் வெளிச்சத்தை நாலாபுறமும் தெறிக்கவிட்டான் எந்தச்சலனமுமில்லை வீடடுக்கதவில் பெரியபூடடுத் தொங்கியது அவன்தனது தோளில் கிடந்த பையை நிலத்தில் வைத்து அதற்குள் கிடந்த பொருட்களை வெளியில் எடுத்து தான் வந்த வேலையை ஆரமபித்தான் முதலில் போத்தலில் கொண்டு வந்த தண்ணீரை நாயின் முகத்தில் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி அதற்கு குடிக்கத் தருகிறான் பின்பு அந்த நாய்க்காக கொண்டு வந்த உணவுப் பார்சலை பிரித்து அதன் முகத்தருகே வைக்கிறான் இரண்டு மூன்று நாட்களாக் சாப்பாடு தண்ணீர் இன்றி கிடந்த அந்த நாய் மளமள வென்று உணவை தின்று விட்டு தெம்புடன் அவனைப் பார்த்தது அவன் குனிந்து அதன் பிடரியைத் தடவினான் இதே சமயம் வளவின் வாசலில் ஒரு வாகனம் வந்து நின்ற சத்தம் கேட்கிறது யாரோ இறங்கி வளவின் இரும்புக் கேற்றை திறக்கும் சத்தம் கேட்கிறது அவனுக்குப் புரிந்து விட்டது வீட்டின் உரிமையாளர்கள் வந்து விட்டார்கள் பூட்டிய வீட்டு வளவிற்குள் அவனைப் பார்த்து விட்டால் திருடனென்று நினைத்துப் பிடித்துத் தாக்குவார்கள் மூன்று நாட்களாக வளர்ப்பு நாய்க்கு சோறு தண்ணீர் இன்றி பட்டினி போட்ட சனங்களுக்கு அவன் சொல்லும் வாதம் எடுபடாது ஓடிப் போய் மதில் ஏறி தெருவுக்குப்பாய முனைந்தான் ஆனால் அவசரத்தில் கால் இடறி மீண்டும் வளவுக்குள் வீழ்ந்து பிடிபட்டான் இவனைப் பேசவிடாது தாக்கினார்கள் "கள்ளன் கள்ளன் என்றார்கள் அவனுடைய முகத்தைப் பார்க்க முயன்றார்கள் ஆனால் அவன் தன் பலம் முழுவதையும் ஒன்றாக்கி திமிறிக் கொண்டு அவர்களது பிடியிலிருந்து தன்னை விடுவித்து ஓட்டம் பிடித்தான் அவன் காலையில் அலுவலகம் செல்லும் வழியில் அந்த வீட்டின் முன்னால் சைக்கிளை நிறுத்தினான் இப்போது அந்த வீட்டிற்கு ஆட்கள் வந்து விட்டார்கள் ஒரே சத்தம் பரபரப்பு கொய்யாமரத்தில் கட்டப்பட்ட அந்த நாய் அவனைக் கண்டு விட்டு நன்றியுடன் முதல் நாள் இரவு வைத்த சாப்பாட்டை நினைத்து வாலாட்டியது நேற்று வாங்கிய அடியால் உடலின் பல பாகங்கள் வலித்தாலும் அந்த நாயைக் காப்பாற்ற முடிந்ததே என்ற திருப்தி அவனுக்கு சின்ன வயதில் இருந்தே மிருக பாசம் அதிகம் அவனுக் நாய் பூனை என்றாலே அலர்ஜியாக நினைக்கும் மனைவி எப்படியோ அவளுக்குத் தெரியாமல் அவன் பலவீனத்தை சாதித்துக் கொண்டதில் உடல் வலித்தாலும் உள்ளம் நிறைவடைந்து விட்டது அவன் சைக்கிளை அங்கிருந்து நகர்த்துகிறான் அந்த நாய் இன்னமும் வாலாட்டிக் கொண்டே தான் இருக்கிறது

எஸ்.செல்வகுமார்
திருகோணமலை

# சிறுவர் அரங்கம்

## குறளும் பொருளும்



குறள்: பருவத்தோ(டு)ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு – 482

பொருள்: காலத்தை அறிந்து முயற்சி செய்பவரிடம் செல்வம் நிலைத்து நிற்கும்


பாப்பா சிறுகதை

# நல்ல சேவை

ஒரு நாள் பாடசாலை இடைவேளை நேரத்தில் கோபி வகுப்பறையின் ஓரத்தில் அழுது கொண்டு நின்றான் அதை அவதானித்த வாசன் அருகில்வந்து அவனிடம் காரணத்தை வினவினான் அதற்கு கோபி "இந்த வருடத்தோடு பள்ளியை நான் விட்டுவிடுவேன்" தொடர்ந்து படிக்க எனக்கு வசதியில்லை அப்பா இறந்த பின் அம்மா தான் இடியப்பம் விற்று என்னை படிப்பித்து வருகின்றார் இப்போது அவருக்கும் இயலாது என்று கூறிக்கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான் வாசனுக்கு அழுகை வந்து விட்டது கண்ணை துடைத்துக் கொண்டு ஆறுதல் கூறினான் வாசன் "கோபி நீ வகுப்பில் கெட்டிக்காரன் அதனால் நீ பள்ளிக்கு வராமல் விடாதே என்னால் முடிந்த உதவி செய்வேன்" என்றபடி வகுப்பறைக்குக் கூட்டிச் சென்றான் அதன் பின் வாசனும் கோபியும் இணை பிரியா நண்பர்கள் ஆனார்கள் வகுப்பில் தேவையான உதவிகளை கோபிக்கு செய்தான் வாசன் மாதங்கள் இரண்டு சென்றன ஒன்பதாம் ஆண்டு பரீட்சைக்கு ஒரு மாதம் இருந்தது ஒரு நாள் கோபியின் வீட்டிற்கு மாலை நேரத்தில் சென்ற வாசன் ஓர் உண்டியலைக் கொடுத்து இதற்குள் இருக்கும் பணத்தை எடுத்து உனக்குத் தேவையான கொப்பி புத்தகங்களை வாங்கி பரீட்சைக்கு ஆயத்தம் செய்யுமாறு கூறி விட்டுப் போகலானான் கோபியும் வாசனும் ஒன்பதாம் ஆண்டு மகாணப் பரீட்சையில் நல்ல முறையில் சித்தியடைந்தார்கள் இருவரும் இந்த சந்தோசமான செய்தியைக் கூறுவதற்கு முதலில் வாசனின் தாய் தந்தையிடம் ஓடினார்கள் வாசனின் தந்தை குதூகலத்துடன் மகனை அணைத்து "கெட்டிக்காரன்" என்று புகழ்ந்தார் அதற்கு வாசன் "என்னை கெட்டிக்காரனாக்கியது இந்த கோபி தான் அப்பா அவன் தான் எனக்குத் தெரியாத பாடங்களை சொல்லித் தந்தவன்" என்றான். அதற்கு கோபி இல்லை இல்லை எனக்கு படிப்பதற்க பண உதவி செய்து ஊக்கம் தந்தவன் வாசன் தான் என்றான் உடனே வாசனின் தகப்பனுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது டேய் வாசன் உனக்கு எப்படி பணம்? என்று கத்தினார் அதற்கு வாசன் அப்பா நான் பள்ளிக்குப் போகும் போது ஐஸ்பழம் வாங்கத் தருகின்ற பணத்தையும் நீங்கள் சிகரட் வாங்கத் தருகின்ற பணத்தில் மிச்சத்தையும் உண்டியலில் போட்டு கோபியின் படிப்புக்கு கொடுத்தேன் அது தப்பா? என்று பயத்துடன் கேட்டான் உடனே மகிழ்ச்சியால் வாசனைக் கட்டியணைத்து தந்தை நல்ல சேவை செய்தாய் மகனே இன்றிலிருந்து நான் சிகரட் குடிக்க மாட்டேன் அந்தப் பணத்தையும் மிச்சப்படுத்தி படிப்பிற்கு உதவி செய்து கோபியை என் பிள்ளை போல் படிப்பிப்பேன் என்றவாறு இருவரையும் முத்தமிட்டார் கோபியும் வாசனும் ஆனந்தத்துடன் சிரித்துக் கொண்டார்கள்

அ.சந்திரவேணி

## பூவிற்குள் ஒரு புதிர்



மாணவர்களே இப்படத்தில் உள்ள தனித்தனி எழுத்துக்களைச் சேர்த்தால் பல மிருகங்களின் பெயர் வரும் (ஒரே எழுத்தை ஒன்றுக்கு மேற்பட்ட தடவை பயன்படுத்தலாம்.)
இதன்மூலம் ஆகக் கூடுதலாக வரும் மிருகங்களின் எண்ணிக்கையை மட்டும் எழுதி அனுப்புங்கள் எழுதி அனுப்பும் பொழுது கீழுள்ள கூப்பனை வெட்டி நிரப்பி அதனுடன் சேர்த்து அனுப்புங்கள் சரியான விடை எழுதுபவரின் பெயர் விபரம் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்
விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

செந்தணல்
61, கற்குழி,
வவுனியா.

### சிறுவர் கேள்வி பதில்

பெயர்:........................................
வயது:........................................
பாடசாலை:........................................
முகவரி:........................................

## இந்தவாரம் நான்



எனது பெயர் லெனிசியா, நான் இரண்டாம் வகுப்பில் கல்வி பயில்கிறேன், எனது வயது 7, நான் புனித அன்னம்மாள் பாடசாலையில் கல்வி பயில்கிறேன். எனக்கு விருப்பமான பாடம் கணிதம், எனது அம்மாவின் பெயர் புளோரன்ஸ், எனது அப்பாவின் பெயர் மேவின், எனக்கு ஒரு அண்ணாவும், ஒரு தம்பியும் உள்ளனர். எனது வகுப்பாசிரியரின் பெயர் கலைமதி, நான் ஆமர் வீதியில் வசிக்கின்றேன். எனது உயிர் நண்பி கிலன்ஸி.



ச.ரஜிதா
தரம்: 5வி
ஸ்ரீ இராமகிருஷ்ன வித்தியாலயம்.
அக்கரைப்பற்று

# மாணவர் கல்வியில் ஆசிரியரது பொறுப்புக்கள்

ஒருசிறந்த பாடசாலையில் அபிவிருத்திசார்ந்த நோக்குக் காணப்பட வேண்டும் ஆசிரியர் ஒரு சிறந்த தொழில் வான்மையாளராக மாற்றப்பட வேண்டும் "மாணவர்கள் ஆசிரியரைப் பற்றிக் கொண்டுள்ள மனப்பாங்குகளை அடிப்படையாகக் கொண்டே வகுப்பறைக்கருமங்கள் நடை பெறுகின்றன என்பதை நாம் ஏற்க வேண்டும் ஆசிரியர்கள் மீது மாணவர்கள் மிகுந்த கௌரவத்தைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களில் வகுப்பறையில் மேற்கொள்ளப்படும் பணிகள் பெரும்பாலும் விளைதிறன் பொருந்தியனவாக அமையும் 70-80 வீதமான ஆசிரியர்கள் பொறுப்புணர்ச்சியோடு கடமையில் ஈடுபடுகின்றனர் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலைக்குச் சமூகம் தரும் அவர்கள் தம்மால் இயன்ற வரை தமக்குரிய பணிகளை ஆற்றுகிறார்கள் என்பது மேற்கொள்ளப்பட்ட பொதுவான ஆய்வினால் புலனாயிற்று." -தேசியக்கல்வி ஆணைக்குழு

ஆசிரியர் பணிஒரு சேவையாகவும் அதேசமயம் ஒருதொழிலாகவும் கருதப்பட வேண்டும் என யுனெஸ்கோவின் ஆசிரியர் உடன்படிக்கை இயம்புகிறது இடையறாது மேற்கொள்ளும் கற்றல் பேணப்படும் விசேடஞானம் விசேட திறைமைகள் என்பன ஆசிரியருக்கு அவசியம் தம் தொழில் மகத்துவம் பெரும்பாலும் தங்கள் மீதே தங்கியிருக்கிறது என்பதை ஏற்று ஆசிரியர்கள் தம் அனைத்து தொழில் நடவடிக்கைகளின் போதும் இயன்றவரை உயரிய அளவினைப் பெற்றுக்கொள்ள முனைதல் வேண்டும்

"ஒரு பாடசாலையின் கலைத்திட்டம் என்பது மாணவர்கள் தனித்து அல்லது குழுக்களாக ஆசிரியர்கள் சகிதம் அல்லது ஆசிரியர்கள் இன்றி பாடசாலையின் உள்ளும் வெளியேயும் பெறத்தக்கவாறு பாடசாலை வயிலாகத் திட்டமிடப்படும் ஒழுங்குபடுத்தப்பட்டு வழங்கப்படும் பயனுள்ள அனுபவங்களால் ஆன ஒரு தொகுப்பாகும்"- (ஜே.எ.ப்.கர் து.கு.மநசசு)

கலைத்திட்டத்தால் இவ்விதமாக அளிக்க வேண்டிய மொத்த அனுபவங்கள் அனைத்தும் கல்வி என்ற இலக்கினை பூர்த்தி செய்து கொள்ள ஏற்ற வகையில் ஆசிரியர்களால் செவ்வைப்படு த்தப்பட வேண்டும் குறிப்பிட்ட அனுபவங்கள் முறைசார்ந்த முறைசாரா கல்விரீதியாக பிள்ளையின் வாழ்வில் ஏற்படுகின்றது

தொடர்ச்சி 14ம் பக்கம்

# எமது பாடசாலை

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று எனும் ஊரில் அமைந்துள்ளது இதன் பெயர் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம் இங்கு சுமார் பத்துக்கு மேற்பட்ட வகுப்பறை கட்டிடங்களில் வகுப்புக்கள் நடை பெறுகின்றன. புதிதாக இரண்டு மாடிக் கட்டிடங்களும் அமைக்கப்பட்டுள்ளது.
எமது பாடசாலையில் சுமார் 1500 மாணவ மாணவிகள் கல்வி கற்று வருகின்றார்கள். ஆசிரியர்கள் 44 பேர் கடமையாற்றுகின்றார்கள். இங்கு தமிழ் மொழியிலேயே பாடங்கள் போதிக்கப்படுகின்றது. சகல மாணவர்களும் தமிழ் மாணவர்களாவார்.
இந்த வித்தியாலயத்தின அதிபராக இ.லோகிதராஜா கடமையாற்றுகின்றார். இங்கே ஆண்டு 1முதல் 13ம் ஆண்டுவரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. பாடசாலையில் மலசல கூடங்கள், சிற்றுண்டிச்சாலை வசதிகளோடு விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், விளையாட்டு மைதானம் சிறுவர் பூங்கா ஆகியவைகளும் சகல வசதிகளுடன் இருக்கின்றது.

ச.ரஜிதா
தரம் : 5வி
ஸ்ரீஇராமகிருஷ்ன மிஷன்
வித்தியாலயம்
அக்கரைப்பற்று 07.

# அறிவுக்கனல்

1. ஒரு மனித உடலில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை என்ன?
2. ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகள் எத்தனை?
3. முதன்முதலில் ஆங்கில அகராதியை தொகுத்தவரின் பெயர் என்ன?
4. பங்களாதேஸ் என்ற நாடு எத்தனையாம் ஆண்டு உருவானது?
5. மிகக்குறைந்த சனத்தொகையைக் கொண்ட நாடு எது?
6. ரேடியத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
7. மனித மூளையில் இருந்து செல்லும் நரம்புகள் எத்தனை?
8. இலங்கையில் இலவசக்கல்வி எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
9. இலங்கையில் குடித்தொகைப் பரம்பல் கூடிய மாவட்டம் எது?
10. முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்க அவர்கள் எப்போது கொலை செய்யப்பட்டார்?

### விடைகள்

1. 206
2. 15
3. சாமுவேல் ஜோன்சன்
4. 1971
5. சீனா
6. மேரிக்கியூரி
7. 12 சோடி
8. 01.10.1945
9. கொழும்பு
10. 26.09.1959

# இலக்கியச் சங்கமம்

## திரு ஹசிம் உமருடன் சிலநிமிடங்கள்

கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்பார்கள் ஆனால் நான் கண்டதையெல்லாம் படித்து விட்டு ஒரு சாதாரண வாசகனானேன் என்கிறார் ஹசிம் உமர். கடந்த 25 வருடங்களாக எழுத்தாளர்களின் உந்து சக்தியாகவே இயங்கி வந்திருக்கிறார்

மேமன் சமூகத்தில் பிறந்த ஒருவர் தமிழ் மொழியில் பற்று வைத்து தமிழ் இலக்கியங்களைப் படித்து தமிழ் முஸ்லீம் சமுகங்களுக்கிடையே உறவுப் பாலமாகத் திகழ்ந்து எழுத்தாளர்களின் கதைகளை நூலாக்கி சமூகம் போற்றத்தக்க ஒருவராக பாராட்டத்தக்க ஒருவராக திகழ்வது ஒரு சாதனை தான்

இனம் மதம் மொழி பேதங்களைக் கடந்து சகலருக்கும் வாரி வழங்கும் இவரை வள்ளல் என்று வாழ்த்துவதா புரவலர் என்று போற்றுவதா? வள்ளல் தன்மைக்கு ஒரு வரையறை உண்டு ஆனால் சிறுகதை, சஞ்சிகைகளின் வெளியீட்டின் முதற்பிரதியைப் பெற்றுக் கொள்ளும் தூய பணி இவரது இறுதி மூச்சு வரை தொடரும்

கேள்வி- தங்கள் மூதாதையர்கள் எவரேனும் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர்களா?

பதில்- இல்லை நான் ஒருவன் தான் இலக்கியத்தில் ஈடுபாடு வைத்திருக்கிறேன் ஒரு வாரத்தில் 50 சஞ்சிகைகள் பத்திரிகைகள் வாசித்து வருவேன் வாசிக்கும் பழக்கம் பள்ளி நாட்களில் இருந்து ஆரம்பமானது அது இன்று வரை தொடர்கிறது



கேள்வி- வசதி படைத்த ஒரு எழுத்தாளனின் நூலை முதற் பிரதியாக பெற்றுக் கொள்கிறீர்கள் அதே சமயம் வசதியற்ற ஒரு எழுத்தாளனின் நூலை முதற் பிரதியாக பெற்றுக் கொள்கிறீர்கள் இரண்டு நூல்களை பெற்றுக் கொள்ளும் போது தங்கள் மன நிலை எப்படி இருக்கும் என்று கேட்டபோது

பதில்- வசதியற்ற ஒருவனின் நூலை முதற் பிரதியாக பெற்றுக் கொள்வதோடு நின்று விடுவதில்லை மேலும் 25 பிரதிகள் அவரிடமிருந்து பெற்று நூல் நிலையங்களுக்கு அனுப்பி வைப்பேன் பாடசாலைகளுக்கும் அந்த நூல்கள் பயன்படும் விதத்தில் அனுப்பி வைப்பேன் இது எனக்கு மனநிறைவைத் தருகின்றது என்கிறார்

கேள்வி- தமிழ் நாட்டில் நூல் வெளியீட்டு விழாக்களில் கலந்து கொண்ட அனுபவம் உண்டா?

பதில்- தமிழ் நாட்டில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவொன்றில் கலந்து கொண்டு முதல் பிரதியை பெற்றுக் கொண்டேன் ப.முத்துக் குமாரசாமி, எஸ்.லிங்கேஸ்வரன், ராஜ் மோகன் ராவ் ஆகியோரிடமிருந்து முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டேன் டாக்டர் பி.சுவாமிநாதன் முன்னிலையில் இது நடைபெற்றது இதனை ஒரு பெரும் பேறாகவே கருதுகிறேன்

இலக்கியப் பணி தவிர்ந்த சமூகப் பணிகளில் ஈடுபட்டுவரும் இவர் ஒரு தடவை பத்திரிகையாளர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கவும் நடவடிக்கை எடுத்தார் இவரது சமூகப் பணி தொடர்கிறது

ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஸ்தாபகரும் மறைந்த முன்னாள் அமைச்சரும் கவிஞருமான எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களிடமிருந்து "ஆயுட்கால புரவலர்" என புகழப்பட்ட ஹசிம் உமரின் இலக்கியப் பணி தொடர வாழ்த்துகிறோம்.



உள்ளூராட்சி வார நிறைவு நிகழ்வு திருகோணமலை சென் ஜோசப் கல்லூரியில் 21.07.2003ம் அன்று நடைபெற்றது. இதில் வவுனியா நகரசபை அனுசரணையுடன் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர் அரங்கு குழுவினரது தெருவோர இராஜாக்கள் எனும் அரங்காற்றுகை நிகழ்த்தப்பெற்றது அரங்க செயற்பாட்டுக் குழுவினருடன் பயிற்சிபெறும் மேற்படி மகாவித்தியாலய மாணவர் அரங்க குழுவினர் காலத்தின் தேவைக்கேற்ப மக்களிடம் நேரில் சென்று சமூக விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

# வெள்ளெருக்குமலர் (அ)சாதாரணமானதா?

சிவனிற்குப் மிகப்பிரியமான மலர் எனக் கூறப்படுவது வெள்ளெருக்கு மிகச் சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய எருக்கலம் மலரை விரும்புவதனால் தன்னை வழிபடவிரும்பும் அடியவர்களுக்கு மிக இலகுவாகக்கிடைக்கக்கூடிய மலரான எருக்கலம் பூவையே தனக்கு அருட்சிப்பதற்கு இறைவன் விருப்புடன் ஏற்றுக் கொள்வதனால், தன்னை அடியவர்க்கு எளிமையாக்கியுள்ளான் என சைவசமயத்திற் கூறப்பட்டுள்ளது வெள்ளெருக்கு மலர் இறைவனாற் விரும்பிச் சூடப்படுவது எனக்கம்பரும் "வெள்ளெருக்குச் சடைமுடியான்" என்று சிவனை இராமாயணத்திற் காட்டியுள்ளார் வெள்ளெருக்கு சித்த மருத்துவத்தில் சிறந்த மருத்துவக்குணங்கொண்ட மூலிகையாகய் கூறப்படுகின்றது சோதிடத்திலேநட்சத்திரங்களுக்கான விருட்சங்களிலே திருவோண நட்சத்திற்குரிய விருட்சமாக எருக்கு குறிப்பிடப்படுவதனை காணலாம் இவ்வாறான எருக்கலஞ் செடியில் இரண்டு வகையான எருக்கலச் செடிகள் உண்டு ஊதாநிற மலர்களை உடைய செடியொன்று தூய வெண்மை நிறங்கொண்ட மலர்கள் மலர்வது ஒன்று தூய வெண்மையான மலர்களை உடையதே வெள்ளெருக்குச் செடி. வெள்ளெருக்குச் செடியைத் தேடி நானும் எனது நண்பியும் நீண்டகாலத்தைச் செலவழித்துள்ளோம் உஷ்ணப்பிரதேசங்களில் இயற்கைத்தாவரமாக விளங்கும் எருக்கிலே வெள்ளெருக்கினை காண்பது மிகவும் அரிது வெள்ளெருக்கினைத் தேடிய நீண்ட பயனத்தில் அதனைக் காணவே இயலவில்லை கடந்த சில வாரங்களிற்கு முன்பு திருக்கேதீஸ்வர ஆலயத்திலே வெள்ளெருக்கு அழகாக மலர்ந்திருந்ததை இருவருமே கண்டோம் மிகுந்த மகிழ்ச்சி கொண்டோம் இறைவனது திருமுடியையே கண்டுவிட்ட ஆனந்தம் இறைவனுக்குப் பிரியமானதும் அவன் சடையினை அலங்கரிப்பதுமாகிய ஒருமலர் சாதாரணமானதாக இருக்கமுடியுமா? அல்லது மிக இலேசாகப் பெறக்கூடியதாக இருக்க இயலுமா? இறைவனது பாதங்களை அடைவதற்கு எவ்வளவு முயற்சியும் தவமும் தேவைப்படுகிறது பேரானந்தப் பெருவாழ்வினைத் தரும் இறைவனை அடைந்து அவன்திருமுடியில் தங்கிவாழும். பேறு பெற்ற வெள்ளெருக்கு மலர் எவ்வளவு உயர்ந்தது அம்மலரை எப்படி மிகச்சாதாரணமாக கிடைக்கும் பொருள் எனலாம் இறைவனை அடைவது எவ்வாறு சாதாரண உயிருக்கு அரிதானதோ அதே போல இறைவனுக்குப் பிரியமான வெள்ளெருக்கும் சதாரணமாகக் கிடைக்ககூடியதாகக் காணப்படவில்லை ஏனெனில் உயர்ந்த இடத்தில் தங்கும் உயர்ந்தமலரல்லவா.

நீதிமன்றில் பக்கம் சாய்ந்த நீதியற்ற தீர்ப்பு வழங்கியவரது வீட்டில் வேதாளஞ் சேரும் வெள்ளெருக்கு பூக்கும் பாதாள மூலிபடரும் என ஔவை பாடினார் ஆதலால் வெள்ளெருக்கினை வீடுகளில் வளர்க்கமாட்டார்கள் இறைவனுக்கு வளர்க்க விரும்பாதமையும் இதன் அருகலிற்கு ஒரு காரணமாகவிருக்கலாமோ.

ரிஷிகர்.

# பாம்புக்கடியும் நாட்டு வைத்தியமும்

ஆடுதீண்டாப்பாலையின் வேரைப் பாம்பு தீண்டப்பட்டவரின் வாயில் விட்டு மென்று தின்னச் சொல்ல வேண்டும் மேலும் பாம்பு கடித்த இடத்தை முகர்ந்து பார்க்கும் போது தாழம் பூ வாசனை வந்தால் கடித்தது நல்ல பாம்பு என்பதை அறியலாம் நல்ல பாம்பு கடித்த இடத்தில் இரத்தப் போக்கு குறைவாக இருக்கும் நல்ல பாம்பு கடித்தால் முதலில் அது சுவாசத்தைத் தான் தாக்கும் மூச்சு விடுவது சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே போகும்

ஒருவருக்கு பாம்பு கடித்து அவருக்கு நஞ்சு ஏறிவிட்டதா என்பதை அறிய அவருக்கு மிளகாயை கொடுத்து கடித்து சுவைக்கச் சொல்ல வேண்டும் காரமாக இருந்தால் நஞ்சு ஏறவில்லை என பொருள் பாம்பு கடித்து சிகிச்சை முடிந்த பின் நஞ்சு இறங்கி விட்டதா என அறிய வேப்பிலையை சுவைக்கச் சொல்ல வேண்டும் வேப்பிலை கசந்தால் நஞ்சு இறங்கிவிட்டது எனப் பொருள் ஆனாலும் கடிபட்ட வரை 24 மணி நேரத்திற்கு தூங்க விடக்கூடாது

நல்ல பாம்பு தீண்டாமலிருக்க என்ன செய்ய வேண்டும்.

கீரிப் பூண்டின் வேரைக் கையில் வைத்திருந்தால் நல்ல பாம்பு நம்மைத் தீண்டாது

வெள்ளைப் பூண்டினை அரைத்து கையில் கால்களில் பூசிக் கொண்டால் நல்ல பாம்புகள் அண்டாது

வீட்டைச் சுற்றி சிறியா நங்கை செடியை வளர்த்தால் அந்த வீட்டிற்குள் எவ் வகைப் பாம்பாயினும் வராது எல்லாவகைப் பாம்பு நஞ்சையும் நீக்கும் சக்தி சிறியா நங்கை இலைகளுக்கு உண்டு

எவ்வகைப் பாம்பு கடித்திருக்கும் என்பதை எப்படி அறிந்து கொள்ள முடியும்

இனிப்பாக இருந்தால் - நல்ல பாம்பு தீண்டியுள்ளது

உப்புக் கரித்தால் - விரியன் பாம்பு கடித்துள்ளது

புளிப்பாக இருந்தால் - வழலைப் பாம்பு கடித்துள்ளது

புளிக்குப் பின் காரம் இருந்தால் - பெரு விரியன் கடித்துள்ளது

கசப்பாக இருந்தால் - விஷமில்லாத பாம்பு கடித்துள்ளது

# விளையாட்டுத்தகவல்கள்

## டென்டுல்காருக்கு மட்டும் விதிவிலக்கா



சென்றவாரம் டென்டுல்கார் வெளிநாட்டிலிருந்து கார் ஒன்றை இறக்குமதி செய்தார் இக்காரிற்கு வரி எதுவும் அறவிடப்படவில்லையாம் இவருக்கு மட்டுமென்ன வரிவிலக்கா.

## சுசந்திக்காவின் காயம் இலங்கைப் பதக்கத்திற்குப் பாதகம்

பாரிசில் நடைபெற்றுவரும் உலக மெய்வல்லுனர் சம்பியன் ஷிப் போட்டிகளில் 100 மீற்றர் காலிறுதிப் போட்டியில் கலந்து கொண்ட சுசந்திக்க ஜெயசிங்கவிற்கு காலில் ஏற்பட்ட காயத்தை அடுத்து சம்பியன் ஷிப் போட்டியில் இருந்து கட்டாயமாக விலகிக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளதால் இலங்கைக்கு பதக்கம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு வீணடிக்கப்பட்டுள்ளது.

100மீற்றர் ஓட்டத்தின் முதலாவது தெரிவுச் சுற்றில் மிகச் சிறப்பாக ஓடி இரண்டாமிடத்தை பெற்று காலிறுதிப் போட்டிக்கு தெரிவாகி இருந்த போதிலும் காலிறுதிப் போட்டியில் பங்குபற்றிய போது இடைநடுவில் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக போட்டியை நிறைவு செய்ய முடியாது போனதால் அரையிறுதிப் போட்டியில் இருந்து வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

சுசந்திக்காவிற்கு காலில் ஏற்பட்ட காயத்தினால் அவர் குறைந்தது மூன்று வாரங்களாக ஓய்வெடுக்க வேண்டும் என்று வைத்தியர்கள் ஆலோசனை வளங்கியுள்ளனர்.



## உலகக்கோப்பைத் தொகையை வட்டியுடன் கொடுக்க BBCஐகோரிக்கை

உலகக் கிரிக்கெட் கழகத்தின் இழப்பீட்டுக் கோரிக்கையை ஆதாரமற்றது என்று ஒதுக்கிய இந்திய கிரிக்கட் வாரியம் தனக்குச் சேரவேண்டிய 6.5மில்லியன் டொலர்கள் உலகக்கோப்பை உத்தரவாதத் தொகையை வட்டியுடன் கொடுக்குமாறு ICC இடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ICC யின் வர்த்தக அங்கமான IDI யிடம் நிறுத்திவைக்கப்பட்டுள்ள தொகையை வட்டியுடன் செலுத்துமாறு கோரியுள்ளது இக்கோரிக்கை ஆதாரமற்றதாகவும் முரண்பாடுகள் நிறைந்ததாகவும் உள்ளதால் பாதிக்கப்பட்ட விளம்பர தார நிறுவனங்கள், கடந்த உலகக் கோப்பையை பொறுத்தமட்டில் தங்கள இழப்பீட்டுக் கோரலை விட்டுக்கொடுப்தாகவும் எழுத்து மூலம் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என இந்தியக் கிரிக்கெட் வாரியத்தின் நிதி மற்றும் பணிக்குழுக் கூட்டத்திலே டால்மியா குறிப்பிட்டார்.



## பதில்கள்

தனா
கொழும்பு

*கேள்வி:* நன்மை செய்து துன்பம் வாங்கும் உள்ளம் பற்றி?

*பதில்:* நன்மை செய்து துன்பம் வாங்கும் உள்ளம் என்பது கிடைப்பது அரிது ஜேசுநாதர் நபிகள் நாயகம், புத்தபகவான், போன்ற ஞானிகளுக்குத்தான் அது கிட்டும் அவ்வாறான உள்ளம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் பாக்கியவான்.

இராசன்
யாழ்ப்பாணம்

*கேள்வி:* பலபேருக்கு வாழ்க்கையின் பிற் பகுதியில் தான் ஆன்மீகத்துறையில் ஈடுபாடு வருகிறதே அது ஏன்?

*பதில்:* நல்லதும் கெட்டதும் யாவும் நடந்து முடிந்தபின்புதான் தெரிகிறது உடம்பில் வலுவுள்ளவரைக்கும் இறைஉணர்வு வருவதில்லை இயலாமை வந்தால்தான் இறைசிந்தனையே வரும் இது மனித இயல்பு.

பாமதி
மல்லாகம்

*கேள்வி:* இளமையில் கல் அப்படியாயின் முதுமையில்?

*பதில்:* இளமையில் பற்ற வேண்டும் முதுமையை நோக்கிய வாழ்வில் அதற்படி நிற்க வேண்டும்.

சாந்தி
பதுள்ளை

*கேள்வி:* இடத்திற்கு இடம் பண்பாடுகள் பழக்க வழக்கங்கள் வேறுபடுவதற்கு காரணம் என்ன?

*பதில்:* பண்பாடுகழும் பழக்க வழக்ககங்களும் இடத்திற்கு இடம் வேறுபடுவது உண்மைதான் மண்ணின் தன்மையும் இடத்திற்கு இடம் வேறுபடுகிறதல்லவா! அந்த மண்வாசனை தான் இதற்குக் காரணம் என நினைக்கிறேன்.

தீபன்
மல்லாகம்

*கேள்வி:* திரிசூலியாரே காதல் இளமையில் மட்டும் தான் வருமா?

*பதில்:* தாகமும், பசியும் குறிப்பிட்ட பருவதத்தில்தான் வருமா? இல்லையே காதலும் அப்படித்தான். எந்தப்பருவத்திலும் வரும். இளமைக்கால காதலைவிட முதுமைக்காதல்தான் உறுதியானதாக இருக்கும்.

சின்னராசு
வவுனியா

*கேள்வி:* பள்ளிசெல்லும் பருவத்தில் பஸ்நிலையத்தில் பிச்சை எடுக்கின்ற பிள்ளைகளிற்குப் பிச்சை கொடுப்பதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

*பதில்:* பிச்சை எடுப்பதென்பது ஒரு தொழிலாகிவிட்டது. பிச்சை யெடுக்கும் பிள்ளைகளிற்குப் பின்னால் ஒரு அணியே இருக்கின்றது. இவ்வாறான பிள்ளைகளிற்கு பிச்சை இடுவதற்கு கணநேரத்தில் தோன்றும் அனுதாபமே காரணமாகிவிடுகின்றது. ஆனால் அப்பிள்ளைகளின் எதிர்காலத்தின் மீது அக்கறை இருந்தால் அவர்களுக்கு பிச்சை கொடுத்து அவர்களுக்கு பிச்சை கொடுத்து ஊக்குவிக்கக்கூடாது. அவர்களது வாழ்க்கையைச் சீரமைக்க முனயவெண்டும் இவை இருக்க இவ்வாறான பிள்ளைகளை நன்நெறிப்படுத்தி அவர்களுக்கு வாழ்வளிக்கவென்று பிரதேச செயலகத்திடம் சமூகசேவை திணைக்களத்திடம் இச்சேவைக் காகவே சம்பளம்பெறும் உத்தி யோகத்தர்கள் இருக்கிறார்களே அவர்களிடம் கேட்டுப்பாருங்கள். அவர்களில் பலருக்கு தமது கடமை என்னவென்பதே தெரிவதில்லை.

கருணாகரன்
முல்லைத்தீவு.

*கேள்வி:* தன்னிடமுள்ள குறைகளைக் காணாது அடுத்தவர் குறையை சுட்டிக்காட்டுபவர் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:* எமது கண்கள் தங்களைக் காண்பதில்லை அல்லவா. எமது கண்களில் உள்ள உத்திகம் தெரிவதில்லை. பிறர்கண்களில் உள்ள தூசியல்லவா பெரிதாக தெரிகிறது இதுதான் மனித இயல்பு. மற்றவர் குறை நமக்கெதற்கு.?

*12ம் பக்கத் தொடர்ச்சி....*

பரீட்சையில் சித்தியடைதல் சித்தியடையாமலிருத்தல் என்பவற்றைக்கவனத்தில் கொள்ளாது பரீசைகளுக்கு முன்னரும் பின்னரும் பாடசாலையிலிருந்து விலகிய இளைஞரிடையே பாரிய அளவிலான தொழிலின்மை விரக்தியினை ஏற்படுத்திய கல்வி தொழில்களுக்கிடையில் நிலவும் ஏற்றதாழ்வு என்பன இளைஞர் தொடர்பான ஆணைக்குழுவின் அவதானிப்பிற்கு உள்ளாயின ஆர்வமற்ற ஆசிரியர்கள் அத்தகையோரது கற்பித்தல் முறைகளில் கலைத்திட்டம் என்பன காரணமாக நல்லொழுக்கத்தைப் பொறுத்தவரையில் நிகழ்ந்த சூனியத்தன்மையும் அவர்களால் அவதானிக்கப்பட்டன.

தேசியக்கல்விக் குழுவின் அறிக்கை 1ம் அத்தியாயம் 1992 என்பதிலிருந்து மாணவர்களினதும் பெற்றோர்களினதும் சமூகத்தினரதும் எதிர்பார்ப்புகள் புலப்படுத்தப் படுகிறது கல்விவழங்கப்படும் போது நவீனத்ததுவம் நிறைந்ததாக இருக்கவேண்டும் புதிய நடைமுறைகளைக் கையா்ளும்திறன் பெற்றவர்களாகவும் ஆங்கில அறிவு உடையவர்களாகவும் மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேற வேண்டும்.

மாணவர்கள் தாம் பயின்று கொண்டவற்றை அமுலாக்குவார்கள் எதிர்பார்க்கத்தக்க சந்தர்ப்பங்களில் அவர்கள் பயிற்சி பெற்ற விதத்திற்கேற்ப நடந்து கொள்வார்கள் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் விவேகத்தோடும் வினைதிறனோடும் அதே சமயம் புதிய முறையிலும் முகம் கொடுக்கவேண்டும்

ஆசிரியரின் அனுபவங்கள் பிள்ளையின் அனுபவங்களாக மாற்றப்படல் ஆசிரியரது உத்திமுறைகள் காரணமாக நடைபெறும் புதுமைகளாகும் அறிவுதிறன் மனப்பாங்குகள் நடத்தை மாற்றங்கள் என்பன் பிள்ளையின் வாழ்க்கையோடு கலந்து விடுகின்றன கற்றல் கற்பித்தல் என்பன அந் நடவடிக்கைகளாகும் மாணவர்களுக்கு தடையாக அமையும் விடையங்களின் போது அவர்களுக்கு உதவுதல் அத்தகைய சந்தர்ப்பங்களை கண்டு கொள்ள வாய்ப்பளித்தல் பாராட்டுதல் என்பன அவசியமாகின்றன பாடசாலைக்கு உகந்த கற்றல் கற்பித்தல் நடவடிக்கையினை அமுலாக்குதல் ஆசிரியர் பணியாகும் தெரிவு செய்யப்பட்ட அனுபவங்களான ஒரு தொகுப்பினை மாணவர்கள் அனுபவங்களாக மாற்றுதல் கற்றல் கற்பித்தல் நடடிக்கையாகும் கற்றல் தொடர்பான நுட்பமுறைகளை திட்டமிடல் மற்றும் மதிப்பீடு என்பன வாயிலாக அனுபவங்களை நிலைக்கச்செய்தல் ஆசிரியர் பங்கு ஆகும்.

ஆசிரியர்கள் மாணவர்களது உள்ளத்தைத் பயிற்றுவிக்க வேண்டும் விவேகத்தைக் கூர்மையாக்க வேண்டும் மாணவர்களின் அறிவை மேம்படுத்தி தொடர்பு சாதனங்கள் சார்ந்த தேர்ச்சிகளை விருத்தி செய்ய வேண்டும் படைப்பாற்றலை மேம்படுத்த வேண்டும் வாய்ப்பு அளிக்கப்படின் தம் விருப்பின்படி தொழில்களில் ஈடுபடத்தக்கவாறு மாணவர்களுக்குத் தேர்ச்சிகளையும் அறிவையும் அளிக்க வேண்டும் நாம் சார்ந்துள்ள சமூகத்துக்கு சேவை செய்யத்தக்கவாறு மாணவர்களின் தன்னம்பிக்கை உண்டாகும் வகையில் ஆவன செய்ய வேண்டும் மாணவ சமூகத்திற்கு தொண்டாற்றக் கூடியவாறு கூட்டாகப்பணிபுரிதல் தலைமை தாங்குதல் தியாகமன ப்பான்மையோடு தொழிற்படல் என்பன்வற்றுக்குரிய திறன்களை விருத்தி செய்து கொள்வதற்காக சமூகத் தேர்ச்சிகளை மேம்படுத்டுத்த வேண்டும்.

எனவே கல்விச் செயற் திட்டங்களை திட்டமிடவும் இனங்காணப்பட்ட செயற் திட்டங்களை வெற்றிகரமாக அமுலாக்கவும் இன்றியமையாத திறன்களை மேம்படுத்திக் கொள்ளல் ஆசிரியர்கள் தொழில்கசார்ந்த பொறுப்புகளாகும் இப் பொறுப்புக்கள் சீராக உணரப்பட்டு செயறபடும் போது மாணவர் கல்வி சிறப்பாக அமையும்.

செல்வி.த.அமிர்தலிங்கம
(கலைப்பட்டதாரி)



# தித்திக்கும் திரை




அலையில் ஒரு பாடல் காட்சியில் சிம்புவும் திரிஷாவும் ஆறு 'கெட்டப்பில் தோன்றுகிறார்களாம் ஸ்கூல் யூனிபோர்ம், டாக்டர்,போலிஸ்,றௌடி,மெற்றிக்ஸ் ஆங்கிலப்பட கெட்டப், எழுபதாவது வருட சினிமா ஹீரோ,ஹீரோயின் கெட்டப், ஸ்பெயின் நாட்டு உடை என பார்த்தீபன் கனவு போல இந்தப்படத்திலும் பார்க்கலாம்



நீண்ட இடைவெளிக்குப்பிறகு அஜித்தின் ஆஞ்சநேயா

## எம்.ஜி.ஆர் ஸ்டைலில் விஜய்



திருமலை படத்தில் விஜக்கு விசேசமான தனிச் சண்டைக்காட்சி அமைதத்துள்ளாராம் பீட்டர் ஹேயின் விஜேய் பைக் ஒன்றில் சென்னை நகரை எந்ததவித சிக்னலிலும் கட்டுப்பாடு இல்லாமல் ஓட்டிச் சென்றாராம். இந்தச் சண்டைக்காட்சி இன்டர்நெசனல் லெவலில் இருக்கும் என்கிறார்கள் அத்தோடு பாடல்களில் எம்.ஜி.ஆர் ஸ்டைலிலும் ஆடிப்படி கையை வீசி அசத்துகிறாராம்.

## ஜேஜே இல் மாதவன்



புதன் 20 ஒகஸ்ட் 20003 ஆஸ்கார் பிலிம்ஸ் தயாரிக்கும் ஜேஜே படத்தை இயக்குபவர் சரண் படப்பிடிப்பு தொடங்குவதற்கு முதல் படத்திற்கு பெரியளவில் ஒரு பிரபல்யத்தை ஏற்படுத்த நினைத்த சரண் நாயகன் மாதவன் நாயகிகள், அமோகா, பூஜா ஆகியோரை வைத்து AVM ஸ்டுடியோ கடைசி மாடியில் மேக்கப், சூட்டிங் மற்றும் போட்டோ ஸ்நெப்ஸ் இரண்டு நாட்கள் நடத்தப்பட்டது.

பூஜாவும், அமோகாவும் இணைந்து மாதவனுடன் அமோகமாக போஸ் கொடுத்தார்களாம்

## சினேகாவின் கனவும் – செல்லும்






படம் திருடா திருடி

இந்திய புருஸ்லீ தனுஷ், சாயாசிங்

## நான் அழகு என்றதுக்கு ரொம்ப நன்றி



மீரா

**தமிழ் சினிமாவில் உங்களுக்குப் போட்டியாக யாரை நியைக்கிறீர்கள்?**

எனது திறமைகளை நான் இன்னும் சரியாக நிருபிக்கவில்லை அதனால் யாரையும் போட்டியா நினைக்கிற தகுதியும் எனக்கில்லை

**உங்கள் அம்மா? அப்பா? அண்ணண்? தம்பி அக்கா தங்கை?**

அப்பா ஜோசப், அம்மா திருமதி ஜோசப் எலியானா, அண்ணண் ஜோ, அக்கா ஜெனி, அடுத்து நான் கடைக்குட்டி தம்பி ஜோர்ச்

**சில நடிகை நடிகர்கள் ரசிகர்களை மதிப்பதில்லையே நீங்கள் எப்படி?**

என்னைப் பொறுத்தவரை ரசிகர்கள்தான் என் முதல் படத்திலேயே இரண்டு கைகளையும்விரித்து அன்போடு ஏற்றுக்கொண்டவர்கள் அவர்களை நான் மதிக்கிறேன்

**அழகில்லையென்றால் யாரும் சீண்டியிருக்க மாட்டார்களே? அந்த அழகிற்காகத்தான் இத்தனை மதிப்பென்று பெருமைப் பட்டதுண்டா?**

என்னை அழகென்று சென்னதற்கு ரொம்ப நன்றி.

## தாத்தா ஆன சரத்குமார்






இரு வேடங்களில் நடித்த படங்கள் எல்லாமே தமிழ்சிங்கம் சரத்குமாரிற்கு சூப்பர் ஹிட் தான் இதுவரை அண்ணன்-தம்பி அப்பா-பையன் போன்ற வேடங்களில் நடித்துச் சலித்துப்போன சரத் தற்போது திவான் படத்தில் தாத்தா-பேரனாக நடிக்கின்றாராம். இப்படத்திற்காக இரண்டு பாடல் காட்சிகள் நியுசிலாந்தில் படமாக்கப்பட்டது சரத்தின் மனைவி ராதிகாவே சொல்லிக் கொடுத்தாரம் இப்படத்தில் பிரபல ஹாலிவுட் யேம்ஸ்பாண்ட் கதாநாயகனான சீன்கானரியின் கெட்டப்பில் தோன்றுகின்றார் தாத்தா சரத்








# சித்திரமும் சிறுகதையும்



## நீங்களும் எழுதலாம்

இப்படத்திற்குப் பொருத்தமான குட்டிக்கதையினை எழுதி அனுப்புங்கள் சிறந்த கதை பிரசுரிக்கப் படுவதுடன் பரிசும் வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**"சித்திரமும் சிறுகதையும்"**
**செந்தணல்**
இல. 61, கற்குழி,
வவுனியா.

## செந்தணல் வாசகர்களே

எதிர்பாருங்கள்

அடுத்த இதழில்


# பொன்பரப்பித்தீவு

பொன். கணேசமூர்த்தி எழுதும் சிறந்த சரித்திரத்தொடர் ஈழவரலாற்றினை அடிப்படையாகக்கொண்ட விறுவிறுப்பூட்டும் காவியத்தொடர். நித்திலங்கொழிக்கும் இலங்கைத்தீவில் தனியரசியற்றிய தமிழ் மன்னனின் வீரவரலாறு. வாசிக்கத்தவறாதீர்கள் பொன்பரப்பித்தீவு

## இதுவும் தாய்ப்பாசமே



படத்திலுள்ள குருவியைப் பார்த்தீர்களா? இக்குருவிக்குத் தான் எத்தனை தாய்ப் பாசம். 30 வருடங்களிற்கு முன் நோபோல்க் (Norfolk) என்ற இடத்தில் மீன் வாயைத் திறந்த போது இக்குருவி உள்ளே நுழைந்து ஐந்து முட்டைகளை இட்டு குஞ்சு பொரித்தது தன்குஞ்சுகளிற்கு மீனின் பல்லு தீண்டிவிடாமல் இருக்க குளக் கரை பாசிகளையும் கொத்திவந்து மென்மையான கூட்டினை அமைத்திருக்கிறது.



ஈராக்கிய தலைநகர் பாக்தாத்தில் 19ம் திகதி செவ்வாயன்று ஐக்கியநாடுகள் அலுவலகம் மீது கார்க்குண்டுத் தாக்குதலை அடுத்து அக்கட்டிடம் தீப்பிடித்து எரிவதையும் கொல்லப்பட்ட ஈராக்கிற்கான ஐ.நா விசேட பிரதிநிதி சேர்ஜியோ வீய்ரா டி மெல்லோவையும் உள்ளே காணலாம்.






இப்பத்திரிகை இல 61. கற்குழி. வவுனியாவில் அமைந்துள்ள சூரியன் வெளியீட்டகத்தினற்காக இல. 315. ஜம்பட்டாவீதி. கொழும்பு 13ல் அமைந்துள்ள ஈ குவாலிட்டி கிரபிக்ஸில் அச்சிட்டு 30-08-2003 அன்று வெளியிடப்பட்டது